Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 543 சுபகிருது வருடம், ஆனி மாதம் 01ஆம் திகதி புதன்கிழமை
(15.06.2022) ஹிஜ்ரி - 1443, ஜுல்ஹஃதா - 14, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## உஷ்



நாமல் ராஜபக்ஷ எம்.பி. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவராக மாறி, பின்னர் கிட்டத்தட்ட 70 எம்.பிக்களுடன் எதிர்க்கட்சித் தலைவராக வருவதற்கான முன்முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் முடியும்வரை எதிர்க்கட்சியில் இருந்து பணியாற்றலாமென கருதுகிறாராம் நாமல். ஆளுங்கட்சியின் பின்வரிசை எம்.பிக்கள் பலருடன் இதுபற்றிய பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன.

## கமெண்ட் கந்தர்..




# ரணிலையும் அழைத்துக்கொண்டு வீட்டுக்குச் செல்லவேண்டும் கோட்டா!

## ராஜபக்ஷமாருக்கு நெருக்கமான அரசியல்வாதி ரஞ்சித் போட்டுத்தாக்கு



ஆளுக்கு ஆள் பந்தை கடத்தாமல் பொறுப்பை ஏற்றுக்கொண்டு ஜனாதிபதி பதவி விலக வேண்டும் - என ராஜபக்ஷ சகோதரர்களுக்கு நெருக்கமான அரசியல்வாதியான வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்சித் சமரக்கோன் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

நல்லாட்சி அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் நோக்கத்துடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உருவாக்கப்பட்டது. மிகக் குறுகிய காலத்தில் அக்கட்சியைச் சுற்றி பெருந்திரளான மக்கள்... 02 பக்கம்

# குருந்தூர்மலை பிரச்சினை பற்றி தமிழ் அரசியல்வாதிகளுடன் பேச்சு

## புத்தசாசன அமைச்சர் விதுர விக்ரமநாயக்க

•யோ.தர்மராஜ்



குருந்தூர்மலை பகுதியில் புத்தர் சிலை நிறுவுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாகக் கூறி ஏற்பட்டுள்ள பிரச்சினை குறித்து, விரைவில் அங்கு சென்று தமிழ் மக்கள் மற்றும் அரசியல்வாதிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி இப்பிரச்சினைக்கு உரிய தீர்வை பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்துள்ளதாக புத்தசாசன சமய, கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, 'தமிழன்' நாளிதழிடம் தெரிவித்தார். 02 பக்கம்

## மட்டுப்படுத்தப்பட்டளவு

# எரிபொருளே விநியோகம்



மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் மட்டுமே சந்தைக்கு விநியோகிக்கப்படுவதாக இலங்கை தனியார் எரிபொருள் பவுசர் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் பொதுமக்கள் எரிபொருள் வரிசையில் நிற்பதைத் தவிர்க்குமாறு சங்கத்தின் செயலாளர் டி.வி.சாந்த சில்வா ஊடகங்களுக்குத் தெரிவித்தார். 02 பக்கம்

# இலங்கை முதலீடுகளை அதானி மீள்பரிசீலனை!



## அதிருப்தியில் இருப்பதாக விசேட அறிக்கை

## பெர்டினாண்டோவின் உளறலால் வந்த வினை

இலங்கையில் காற்றாலை மின்னுற்பத்தியை பெற இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தங்களை வழங்கியதாக, இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவர் பெர்டினாண்டோ தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்துகளையடுத்து இந்தியாவின் முன்னணி நிறுவனமான அதானி குழுமம், இலங்கையில் செய்யப்படும் முதலீட்டுத் திட்டங்களை மீள்பரிசீலனை செய்ய ஆரம்பித்துள்ளதாக இந்தியாவின் உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்கள் நேற்றிரவு 'தமிழன்' நாளிதழிடம் தெரிவித்தன.

அதானி குழுமத்தின் இலங்கைக்கான முதலீடுகளை தக்கவைத்துக்கொள்ள இலங்கை அரசாங்கம் இராஜதந்திர மட்டத்தில் செயற்பட்டு வருகின்ற போதிலும், அது பெரிதும் முன்னேற்றத்தை தரவில்லையென்றும் அந்த வட்டாரங்கள் உறுதிப்படுத்தின.

இந்தப் பின்னணியில் நேற்று விசேட அறிக்கையொன்றை விடுத்த அதானி குழுமம், இலங்கையின் எரிசக்தி திட்டம் தொடர்பான சர்ச்சை தொடர்பில் கடும் அதிருப்தி அடைந்துள்ளதாக தெரிவித்துள்ளது.

இலங்கையில் முதலீடு செய்வதில் தமது நோக்கம் மதிப்புமிக்க அண்டை நாடுகளின் தேவைகளை நிவர்த்தி செய்வதாகும் என்று அதானி குழுமம் குறிப்பிட்டுள்ளது. 02 பக்கம்

# கொழும்பில் இன்றுமுதல் அறிமுகமாகும் புதிய சேவை



கொழும்பில் இன்றுமுதல் தினமும் 'பார்க் எண்ட் ரைட்' பஸ் சேவையை நடத்துவதற்கு போக்குவரத்து சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய, காலை 6 மணி முதல் மாலை 8 மணிவரை மாக்கும்புர, கடவத்தை மற்றும் கட்டுபெத்த ஆகிய இடங்களில் குறித்த பஸ்கள் பயணிக்கவுள்ளன. மாலை 4 மணிமுதல் 6 மணிவரை கொழும்பில் இருந்து மாக்கும்புர, கடவத்தை மற்றும் கட்டுபெத்த வரை பஸ் பயணிக்கும் என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். 02 பக்கம்

# பணவீக்கம் தொடர்ந்தால் பாணின் விலை 1500 ரூபா

## கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் சுனில் அச்சம்



பணவீக்கம் இவ்வாறு தொடர்ந்தும் அதிகரிக்கும் பட்சத்தில், டிசம்பர் மாதத்துக்குள் சராசரியாக ஒரு இறாத்தல் பாண் 1,500 ரூபாவாக இருக்கும் என தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்தார்.

தனியார் வானொலி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். இன்று 100 ரூபாவில் முச்சக்கரவண்டியில் பயணம் செய்வது டிசம்பர் மாதத்தில் 1,790 ஆக இருக்கும் என்றும் அவர் கூறினார். 02 பக்கம்

# பதுளை சாமர எம்.பி. ஐ.தே.கவுக்கு தாவல்?



•யோ.தர்மராஜ்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத்தசநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. 02 பக்கம்

## பங்களாதேஷிடமிருந்து

# அரிசி கேட்கும் இலங்கை

பங்களாதேஷிடம் இருந்து ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய இலங்கை கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பாக வர்த்தக வாணிப அமைச்சர் நளின் பெர்னாண்டோ மற்றும் பங்களாதேஷின் இலங்கைக்கான தூதுவர் தாரிக் ஆரிபுல் இஸ்லாம் ஆகியோருக்கு இடையில் முதற்கட்ட பேச்சுவார்த்தைகள் திருப்திகரமாக நிறைவடைந்துள்ளன. 02 பக்கம்

# ஆட்களை படகிலேற்றி வெளிநாடு அனுப்பும் கும்பல் குறித்து கவனம்!

## கூட்டிச் செல்வோரே காட்டியும் கொடுப்பதாக பாதுகாப்புத் தரப்பு தகவல்

•யோ.தர்மராஜ்

பொருளாதார நெருக்கடியால் நாட்டை விட்டு சட்டவிரோதமாக செல்லும் பயணிகளை அழைத்துச் செல்லும் தரப்பினர் பயணிகளிடம் பணத்தை பெற்றுக்கொண்டு அவர்கள் தொடர்பான தகவல்களை பாதுகாப்பு தரப்பிடம் வழங்கும் வியாபாரம் தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளதாக பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடியால் சட்டவிரோதமான முறையில் படகுகளில் நாட்டைவிட்டுச் செல்லும் தரப்பினரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதன்படி, அவுஸ்திரேலியாவிற்கு அதிகமானோர் செல்வது குறித்து கடந்த காலங்களில் தகவல்கள் கிடைக்கப்பெற்றன.

இவ்வாறு செல்லும் பலர், கடற்படையினர் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினரால் கைதுசெய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்டவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் நாட்டின் நெருக்கடியினாலேயே இவ்வாறு நாட்டைவிட்டு வெளியேறுவதாக தெரிவித்துள்ளனர். 02 பக்கம்

# 2024ஆம் ஆண்டிலிருந்து இலங்கைக்கு முன்னேற்றம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

''2019ஆம் ஆண்டு இருந்த பொருட்களின் விலைகளை திரும்ப கொண்டு வருவது சாத்தியமில்லாத நிலையில், மக்களின் வருமானத்தை படிப்படியாக அதிகரிப்பதே தற்போது செய்யக்கூடிய காரியம்'' என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

சூம் (zoom) தொழில்நுட்பத்தின் ஊடாக இளம் தொழில் வல்லுநர் கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுடனான கலந்துரையாடலின் போதே பிரதமர் ரணில் விக்ரமசிங்க இக்கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

இளைஞர்கள் நம்பிக்கை வைக்கக் கூடிய நாட்டைக் கட்டியெழுப்ப, தாம் முன்னெடுத்துள்ள சவாலை நிறைவேற்ற தயாராக இருப்பதாக தெரிவித்த பிரதமர் ரணில் விக்ரமசிங்க, இந்த வருடம் அது சாத்தியமில்லையென்றாலும் 2024ஆம் ஆண்டிலிருந்து நம்பிக்கையுடன் முன்னோக்கிச் செல்ல முடியும் எனவும் தெரிவித்துள்ளார். 02 பக்கம்

# ரணிலின் அழைப்பு வந்தது

## அமெ. இராஜாங்க செயலர்



இலங்கையின் புதிய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுடன் தொலைபேசி உரையாடல் இடம்பெற்றதாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் அந்தோனி பிளிங்கன் ட்விட்டரில் தெரிவித்துள்ளார்.

"பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் சவாலான காலங்களில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் சர்வதேச சமூகத்துடன் நெருக்கமான ஒருங்கிணைப்புடன் இலங்கையுடன் இணைந்து பணியாற்ற அமெரிக்கா தயாராக உள்ளது" என அமெரிக்க இராஜாங்க செயலாளர் அந்த ட்விட்டரில் மேலும் தெரிவித்துள்ளார்.

# அரச பணியாளர்களுக்கு வெள்ளிக்கிழமை விடுமுறை

•யோ.தர்மராஜ்

பயிர்ச்செய்கை மற்றும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்காக அரச உத்தியோகத்தர்களை வலுப்படுத்துவதற்காக அரச அதிகாரிகளுக்கு வாரத்தில் வெள்ளிக்கிழமையன்று விடுமுறை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அத்தோடு, நீர் வழங்கல், மின்சார விநியோகம், சுகாதாரம், பாதுகாப்பு சேவைகள், கல்வி, போக்குவரத்து, துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் போன்ற அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்போருக்கு விடுமுறை வழங்கப்படாது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவையில் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஷ் குணவர்தன சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது நிலவுகின்ற எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பயணிகள் போக்குவரத்துத் தடைகள் ஏற்பட்டுள்ளதுடன், அந்நிலைமையால் அரச ஊழியர்களுக்கு தமது... 02 பக்கம்



பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நேற்று கொழும்பில் இடம்பெற்ற தானம் வழங்கும் நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

(படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)

# வெட்டிக்கொண்டிருந்த மரத்துண்டு நெஞ்சுப் பகுதியில் தாக்கியதில் ஒருவர் பலி



(தலவாக்கலை நிருபர்)

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரேஸ்வெஸ்டன் ஸ்கல்பா தோட்டத்தில் மரம் ஒன்றினை துண்டுத்துண்டாக வெட்டிக் கொண்டிருந்த நபர் மீது அம்மரத்தின் துண்டுப் பகுதி ஒன்று நெஞ்சுப் பகுதியில் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. தலவாக்கலை கிரேஸ்வெஸ்டன் ஸ்கல்பா தோட்டத்தைச் சேர்ந்த செல்லதுரை மணிமாறன் (வயது 34) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஹேலீஸ் பிளான்டேசன் பெருந்தோட்ட கம்பனியின் கீழ் இயங்கும் கிறேட்வெஸ்டன் ஸ்கல்பா தோட்டத்தில் ஒப்பந்த அடிப்படையில் மரம் வெட்டப்படுகின்றது. அதில் குறித்த தொழிலாளியும் மற்றொரு தொழிலாளியும் நேற்றைய தினம் ஸ்கல்பா தோட்டத்தில் பள்ளத்தாக்கு பகுதியொன்றில் ஏற்கனவே வெட்டப்பட்டிருந்த இரண்டு மரங்கள் ஒன்றோடு ஒன்று கீழே கிடந்தபோது ஒரு மரத்தின் மேலே நின்று அதனை துண்டுத்துண்டாக வெட்டிக்கொண்டிருந்தபோது அதில் ஒரு பகுதி மரத்துண்டு வழுக்கி கொண்டு வந்து குறித்த நபரின் நெஞ்சுப் பகுதியில் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வத்தளையில் நபரொருவர் மீது துப்பாக்கிச் சூடு!

வத்தளை, எலகந்த பிரதேசத்தில் நேற்று (14) மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இருவர், நபரொருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பித்துச் சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

குறித்த நபர் சிகிச்சைக்காக ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் படுகாயங்களுக்குள்ளான நபர் கொழும்பு மட்டக்குளி பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துக்கான காரணம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கொழும்பில் இன்று...

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பார்க் எண்ட் ரைட் என்பது தங்கள் சொந்த வாகனத்தில் பயணத்தை மேற்கொள்ளும் கொழும்பு வாழ் மக்கள் அதனை மாக்கும்புர, கடவத்தை மற்றும் கட்டுபெத்த பகுதிகளில் பாதுகாப்பாக நிறுத்திவிட்டு, சொகுசு பஸ்களில் கொழும்பு நகரத்திற்கு பயணிக்க முடியும். அதற்காக சொகுசு பஸ் சேவைகள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

காலை 6 மணி முதல் 8 மணி வரை 5 நிமிடங்களுக்கு ஒரு முறை குறித்த 3 இடங்களில் இருந்து பஸ் பயணிக்கின்றது.

பின்னர் மாலை 6 மணி முதல் 8 மணி வரையான காலப்பகுதியிலும் இவ்வாறு 5 நிமிடங்களுக்கு ஒரு முறை பஸ் சேவையில் ஈடுபடும். இடைப்பட்ட காலப்பகுதியில் மணித்தியா லத்திற்கு ஒருமுறை ஒரு பஸ் பயணிக்கும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஜனவரி மாதம் 15ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் முதல் முறையாக இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட நிலையில், தற்போது பயன்பாட்டுக்கு வருகின்றது.

வாகன சாரதி மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் கொழும்புக்கு வருவதற்கு வசதியாக மற்றும் பாதுகாப்பான பஸ் சேவைகளை வழங்குவதன் மூலம் காலை மற்றும் மாலை நேரங்களில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பது இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

## பங்களாதேஷிடமிருந்து...

இலங்கையில் எதிர்வரும் நாட்களில் ஏற்படக்கூடிய அரிசித் தட்டுப்பாடு மற்றும் உணவு பஞ்சத்தை தவிர்க்கும் நோக்கில் ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் அரிசி வழங்குமாறு பங்களாதேஷிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் சாதகமாக பதிலளித்துள்ள இலங்கைக்கான பங்களாதேஷ் தூதுவர் ஆரிபுல் இஸ்லாம், இலங்கையர்களுக்கு பங்களாதேஷில் முதலீடுகளை மேற்கொள்ளும் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். இந்த கலந்துரையாடலின்போது வர்த்தக, வாணிப அமைச்சின் செயலாளர் எஸ்.டி. கொடிகாரவும் கலந்து கொண்டுள்ளார்.

## குருந்தூர்மலை பிரச்சினை பற்றி...

அத்தோடு, தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதியுடன் பழைமையான விகாரையை புதுப்பிப்பதற்கான செயற்பாடு மாத்திரமே இடம்பெறுகின்றதே தவிர, அங்குள்ள மக்களின் உரிமைகளை பறித்துவிட்டு, சிங்கள மக்களை குடியேற்றுவதற்கான எவ்வித முயற்சிகளும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

குருந்தூர்மலை பகுதியில் புத்தர் சிலை நிறுவுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவதாகக் கூறி அங்குள்ள மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டது குறித்தும் இப்பிரச்சினைக்கு உரிய அமைச்சர் என்ற வகையில் எவ்வாறான நடவடிக்கைகளை எடுத்துள்ளீர்கள் என்பது தொடர்பாகவும் வினவிய போதே அவர் இதனை 'தமிழன்' நாளிதழிடம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

குருந்தூர்மலை பகுதியிலுள்ள பழைமையான விகாரையை தொல்பொருள் ஆராய்ச்சிக்கு உட்படுத்தி அது இருந்தவாறு மீண்டும் புதுப்பிப்பதற்கே நாங்கள் எதிர்பார்த்துள்ளோம். எனினும், அதற்கு அருகில் இந்து கோவில் ஒன்றும் இருந்ததாக தமிழ் மக்கள் கூறுகின்றனர். அது எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது.

அரசியல்வாதிகளுக்கு அது பிரச்சினையாக இருந்தாலும் மக்களுக்கு எவ்வித பிரச்சினையுமில்லை. மக்களை தூண்டிவிடும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன. கொழும்பில் 33 வீதமானவர்களே சிங்கள மக்களாக இருக்கின்றனர். 66 வீதமானவர்கள் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களாக இருக்கின்றனர். ஆனால், யாரேனும் வீதியில் இறங்கி சண்டையிடுகின்றனரா? எனவே, சில அரசியல்வாதிகளின் தேவைகளுக்காக மக்களை தூண்டிவிடுகின்றனர்.

நான் இராஜாங்க அமைச்சராக இருக்கும் போது, தமிழ் அரசியல்வாதிகளை அழைத்து பேச்சுவார்த்தையும் நடத்தியுள்ளேன். தொல்பொருள் ஆராய்ச்சிக்கு உட்பட்டு உரிய நடவடிக்கைகளை மாத்திரமே முன்னெடுப்போம். எனவே, யாரும் அச்சம் கொள்ள வேண்டாம் என உறுதியளித்திருந்தேன்.

இன்று மக்கள் அங்கு போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். அதனை தடுக்க முடியாது. அது மக்களின் உரிமையாகும். எனினும், மக்களின் உரிமைகளை பறித்துவிட்டு, சிங்கள மக்களை குடியேற்றுவதற்கு முயற்சிக்கவில்லை.

பழைய விகாரையை மீண்டும் புதுப்பிக்கும் நடவடிக்கையே அங்கு தற்போது முன்னெடுக்கப்படுகின்றது. தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதிக்கு அமையவே அந்த செயற்பாடும் முன்னெடுக்கப்படுகின்றது.

அங்கு இந்துகோவில் இருக்குமாக இருந்தால் தமிழ் மக்களுக்கு வழிபாடுகளை முன்னெடுப்பதற்கு எவ்வித தடையுமில்லை. அங்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நான் எதிர்பார்த்துள்ளேன். எனினும், வழக்கு தொடரப்பட்டுள்ளதால் என்னுடைய கண்காணிப்பு பயணம் அழுத்தமாக அமைந்துவிடும். அத்தோடு, அங்கு நான் சென்றாலும் மக்கள் போராட்டத்தில் ஈடுபடுவார்கள்.

இதேவேளை, நான் அங்கு சென்றால் தமிழ் மக்கள் மற்றும் அரசியல்வாதிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி இப்பிரச்சினைக்கு உரிய தீர்வை பெற்றுக்கொடுப்பேன் - என்றார்.

## ரணிலையும் அழைத்துச்...

திரண்டு 2018இல் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் பெரும் வெற்றிபெற வைத்தனர். அதன் பின்னர் 2019 ஜனாதிபதித் தேர்தலில் நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் நம்பிக்கையுடன் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். ஆனால், அவர் ஆட்சிக்கு வந்த நாளிலிருந்து நாளுக்கு நாள் மக்களின் எதிர்பார்ப்புகளை ஏமாற்றத் தொடங்கினார். அதுதான் பிரச்சினையின் மூலம். பெற்றோரைப் போல நேசித்த கட்சிகளை விட்டுவிட்டு அனைவரும் மொட்டுக் கட்சியில் சேர்ந்தனர். மிகுந்த நம்பிக்கையுடன் அவர்கள் இணைந்து கொண்டனர்.

அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை வீழ்ச்சியடைந்ததன் காரணமாக தற்போது மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது. நாட்டின் தலைமைத்துவத்தின் பொறுப்பற்ற செயற்பாடுகளினால் இன்று நாட்டில் பொருளாதார, அரசியல் ஸ்திரமின்மை தலைதூக்கியிருப்பது இரகசியமல்ல.

ரணில் விக்ரமசிங்கவிற்கு பிரதமர் பதவியை வழங்குவதே சிறந்த முடிவு என ஜனாதிபதி கோட்டாபய நினைத்தால் அது விவசாயிகளுக்கு உரம் வழங்காமல் நாட்டுக்கு ஏற்பட்ட அழிவு போன்றது என உறுதியாக கூறமுடியும். இன்று அனைத்து அரசியல் கட்சிகளும் குழப்பத்தில் உள்ளன. மேலும் போராட்டக்காரர்கள் சொல்வது தவறு என ஆரம்பத்தில் நினைத்தோம். ஆனால் அது சரிதான் என்று இப்போது புரிகிறது.

மஹிந்த ராஜபக்ஷவை செல்லுங்கள் என நாட்டு மக்கள் கூறியதையடுத்து, ரணில் விக்ரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டது மக்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக அல்ல, வீழ்ந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்பவே. ஆனால் அவர் வேறு ஏதோ செய்து கொண்டிருக்கிறார். அதனால்தான் இந்தப் பிரதமரை அழைத்துக் கொண்டு ஜனாதிபதியை வீட்டுக்குச் செல்லுமாறு கூறுகிறேன், "என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆட்களை படகிலேற்றி வெளிநாடு...

கடற்படையினரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் வருட ஆரம்பம் முதல் இதுவரை அவுஸ்திரேலியாவிற்கு சட்டவிரோதமான முறையில் படகில் செல்ல முயற்சித்த 250 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் குழந்தைகள் மற்றும் பெண்களும் அடங்குவதாக பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பு, சிலாபம், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளை மையமாகக் கொண்டே இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், ஒருவரிடம் இருந்து 7 இலட்சம் தொடக்கம் 10 இலட்சம் வரையில் வியாபாரிகளினால் பெற்றுக் கொள்ளப்படுவதாகவும் ஆட்களை படகில் ஏற்றிய பின்னர் அவர்கள் தொடர்பான தகவல்களை வியாபாரிகளே பாதுகாப்புத் தரப்புக்கு வழங்குவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை, கரையிலிருந்து பெரிய படகுகளுக்கு ஆட்களை ஏற்றிச் செல்வதற்காக சிறிய படகுகளை வைத்திருப்போர் ஒருவரிடத்திலிருந்து 80 ஆயிரம் தொடக்கம் ஒரு இலட்சம் வரையும் பெற்றுக்கொள்ளப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

கடற்படை ஊடகப் பேச்சாளர் கெப்டன் இந்திக டி சில்வா இது குறித்து தெரிவிக்கையில்,

இந்தப் பயணம் மிக ஆபத்தானது. ஆட்களை ஏற்றிச் செல்வதற்காக வியாபாரிகள் பழைய பழுதடைந்த படகுகளையே பயன்படுத்துகின்றனர். கடற்பரப்பின் தன்மைக்கு அமைய இந்தப் பயணம் மிக ஆபத்தானதாக அமையும்.

எனினும், கடற்படையினரால் எந்தவொரு படகும் நாட்டை விட்டுச் செல்வதற்கு இடமளிக்கப்படாது. ஒருவேளை, மீறிச் சென்றால் அவுஸ்திரேலியாவில் கைது செய்யப்பட்டு மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள். எனவே, சட்டவிரோதமான மற்றும் வியாபாரிகளின் போலியான விடயங்களுக்காக ஏமாற வேண்டாம் எனவும் பொது மக்களிடம் கேட்டுக் கொள்கின்றோம் - என்றார்.

## 2024ஆம் ஆண்டிலிருந்து...

இந்த ஆண்டு கடினமாக இருக்கும், ஆனால் 2024 ஆம் ஆண்டு முதல் நம்பிக்கையுடன் முன்னேறலாம். 2023ஆம் ஆண்டு ஒரு சிறிய முன்னேற்றத்தை காணலாம் என தெரிவித்துள்ளார்.

## பணவீக்கம் தொடர்ந்தால்...

உயர் பணவீக்கம் மிகவும் ஆபத்தான சூழ்நிலை என்றும், அதனை வளர்ச்சியடையாமல் தடுக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

## அரச பணியாளர்களுக்கு...

போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் தோன்றியுள்ளன. இந்நிலைமையில் வாரத்தில் ஒரு நாள் அரச விடுமுறையை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, நாட்டில் எதிர்வரும் காலங்களில் ஏற்படக் கூடுமென எதிர்பார்க்கின்ற உணவுத் தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக தமது வீட்டுத்தோட்டங்களில் அல்லது வேறு இடங்களில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கான வசதிகளை வழங்கும் வகையிலேயே இந்த விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

எனினும் நீர் வழங்கல், மின்சார விநியோகம், சுகாதாரம், பாதுகாப்பு சேவைகள், கல்வி, போக்குவரத்து, துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் போன்ற அத்தியாவசிய சேவைகளை வழங்கும் அரச நிறுவனங்கள் தவிர்ந்த ஏனைய அரச நிறுவனங்களை எதிர்வரும் 03 மாதங்களுக்கு வாரத்தின் வெள்ளிக்கிழமையன்று மூடுவதற்காக இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## மட்டுப்படுத்தப்பட்டளவு...

பொதுவாக வெசாக் மற்றும் பொசன் போயா நாட்களில் எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்படுவதில்லை எனவும், எனினும் நேற்று விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டதாகவும் சில்வா தெரிவித்தார்.

நேற்றுக் காலை வரை 30 பவுசர்கள் மட்டுமே கொலன்னாவ இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையத்திற்கு வந்ததாக அவர் கூறினார்.

நேற்றுமுன்தினம் நாடளாவிய ரீதியில் 200க்கும் குறைவான நிலையங்களுக்கே எரிபொருள் வழங்கப்பட்டதாகவும், நேற்று குறைவான நிலையங்களுக்கே விநியோகிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இணையத்தளத்தில் இன்று எந்தெந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் கிடைக்கும் என்ற விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளதாகவும், அந்த நிரப்பு நிலையங்களுக்கு மாத்திரமே எரிபொருள் விநியோகிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

350-400 பவுசர்கள் வழமையாக செயற்படும் அதேவேளை, தற்போது 30 பவுசர்கள் மூலம் எரிபொருள் விநியோகத்தில் 2-3 வீதத்தை மாத்திரமே விநியோகிக்க முடியும் என சில்வா தெரிவித்தார்.

50-75 எரிபொருள் ஓர்டர்கள் மட்டுமே கையிருப்பில் உள்ள பவுசர்கள் மூலம் நிறைவேற்றப்படும் என்றும், அதனால் எந்த எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மீண்டும் நிரப்பப்படும் என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை என்றும் அவர் கூறினார்.

முன்னறிவிப்பு இன்றி எரிபொருள் கையிருப்பு விநியோகிக்கப்படும்போது எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சிரமங்களை எதிர்கொள்வதாக சில்வா கூறினார்.

## பதுளை சாமர எம்.பி...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலுள்ள பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே அதிருப்தியிலுள்ள நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஏனைய உறுப்பினர்களையும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைத்துக்கொள்வது தொடர்பில் இவர் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியதற்கு பின்னர் கட்சி உறுப்பினர்களை சந்திப்பதற்கு எவ்விதத்திலும் முக்கியத்துவம் கொடுக்காதமையினால், பல உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுடன் இணையவுள்ளதாக உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், பிரதமருக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் என்றும், யார் ஆதரவு வழங்கினாலும் வழங்காவிட்டாலும் தாம் முழுமையான ஆதரவை வழங்குவதாக கூறியிருந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கூட்டணியில் போட்டியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவே, தற்போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையவுள்ளதாக அறிய முடிகின்றது.

அதிருப்தியிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களையும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைக்கும் முயற்சியில் இறங்கியுள்ள அவர், அவர்களுடன் பேச்சுவார்த்தையில் சாதகமான முடிவு கிடைக்காதபட்சத்தில், யார் வந்தாலும், வராவிட்டாலும் தான் தனித்துச் சென்றாவது ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளதாகவும் அறிய முடிந்தது.

## இலங்கை முதலீடுகளை...

எனினும், தற்போது எழுப்பப்பட்டுள்ள சர்ச்சை காரணமாக தாம் ஏமாற்றமடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ள அதானி குழுமம், இந்த பிரச்சினை ஏற்கனவே இலங்கை அரசாங்கத்தால் தீர்க்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

காற்றாலை மின் திட்டத்தை நேரடியாக அதானி குழுமத்திற்கு வழங்குமாறு பிரதமர் மோடி அழுத்தம் கொடுத்ததாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்ததாக நாடாளுமன்ற கோப் குழு முன் கூறிய, இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவர் எம்.எம்.சி. பெர்டினாண்டோ, மூன்று நாட்களுக்குள் பதவியில் இருந்து இராஜினாமா செய்தார்.

அவரின் கூற்றை ஜனாதிபதி ராஜபக்ஷ உறுதியாக மறுத்தமையை அடுத்தே, அவர் பதவி விலகியுள்ளார். ஆனாலும் இந்தியப் பிரதமர் வெளிநாடுகளுக்கு அழுத்தங்களை வழங்குவதாக இந்திய எதிர்க்கட்சிகள் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றன. மறுபுறம், இலங்கை மின்சாரசபையின் நிர்வாகத்திற்குள் சீனாவின் அழுத்தங்கள் இருப்பதால் தான் இந்திய முதலீட்டாளர்களுக்கு எதிராக கருத்துகள் முன்வைக்கப்படுவதாக இந்தியத் தரப்பில் கருதப்படுகிறது.

ஏற்கனவே, 2021ஆம் ஆண்டில், கொழும்பு துறைமுகத்தின் மேற்கு சர்வதேச கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கும் இயக்குவதற்கும், இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் 700 மில்லியன் டொலர் உடன்படிக்கையில் அதானி குழுமம் கையெழுத்திட்டுள்ளது.

மன்னார் மற்றும் பூநகரியில் 500 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க காற்றாலை எரிசக்தி திட்டம் பற்றி ஆராய தொழிலதிபர் அதானி கடந்த ஆண்டு ஒக்டோபரில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

அவரது வருகையின் கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்குப் பிறகு, அதானி குழுமம் மன்னாரிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரியிலும் இரண்டு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியில், அதானி குழுமம் இலங்கைக்கான தனது முதலீட்டுத் திட்டங்களை இடைநிறுத்துமானால் அது பெரும் பொருளாதார பாதிப்பைத் தருமென்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய இழுவைப் படகுகளை கட்டுப்படுத்தக் கோரி தமிழக முதலமைச்சருக்கு மகஜர் கையளிக்க முடிவு

## யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் அறிவிப்பு

இந்திய இழுவைப் படகுகளை கட்டுப்படுத்தக் கோரி தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்ஷங்கருக்கும் மகஜரொன்றை கையளிக்க வடக்கு கடற்றொழிலாளர்கள் தீர்மானித்துள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ.அன்னராசா தெரிவித்துள்ளார்.




யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் நடைபெற்ற கூட்டத்துக்குப் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய இழுவைப் படகுகளை தடுக்கக்கோரி நாம் மிகப்பெரிய போராட்டங்களை செய்ததுடன் மகஜர்களை அனுப்பியும் வடக்கு கடற்றொழில் சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு எதுவும் எட்டப்படவில்லை.

தீர்வு கிடைக்காத காரணத்தினால் நாங்கள் தொடர்ந்து தீர்வு கிடைக்கும்வரை எங்கள் இறையாண்மையை பாதுகாப்பதற்கு பொருளாதார நெருக்கடியை தாண்டி போராட வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றோம் என்பதை தமிழக முதலமைச்சர் ஸ்டாலினுக்கும் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழ் மக்களுக்கான உரிமைக்காக குரல் கொடுக்கின்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழ் உணர்வாளர்களுக்கும் தமிழக கட்சித் தலைவர்களுக்கும் இந்த நேரத்திலே தயவாக தெரிவிக்க விரும்புகிறோம்.

விசைப்படகுகளை எமது கடல் எல்லைக்குள் வராது தடுத்து நிறுத்தி எம்மை பொருளாதார நெருக்கடியிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற செய்தியை தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைவரிடமும் விடுக்கின்றோம்.

தமிழகத்தில் காணப்பட்ட மீன்பிடித் தடைக்காலம் முடிவடையவுள்ள நிலையில் இந்திய மீனவர்கள் இலங்கை பகுதிக்குள் அத்துமீறலாம் என்பதால் அதனை கட்டுப்படுத்த கோரியே தமிழக முதலமைச்சர் ஸ்டாலினுக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்ஷங்கருக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுக்கும் ஒரு கடிதத்தை நாளைய தினம் அனுப்பவுள்ளோம்.

மேலும், இழுவைமடிப் படகுகள் எமது கடலுக்குள் வந்தால் நாம் மிகுந்த நெருக்கடியை எதிர்கொள்ளவேண்டி ஏற்படும்.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட நாம் மீன்பிடி உபகரணங்களை வடக்கில் பெறுவது மிகவும் அரிதானது. அது கிடைத்தாலும் அதிக விலைக்கே கொள்வனவு செய்யவேண்டிய நிலை காணப்படுகின்றது - என்றார்.

# சீனாவிடமிருந்து இலங்கைக்கு ஆறு தொகுதி அரிசி தொகை!

## முதல் இரு பகுதிகள் இம்மாத இறுதியில் நாட்டை வந்தடையும்






மானிய அடிப்படையில் இலங்கைக்கு ஆறு தொகுதி அரிசி தொகையை வழங்க தீர்மானித்துள்ளதாகவும் அதன் முதல் இரு தொகுதிகளும் இந்த மாத இறுதியில் நாட்டை வந்தடையும் எனவும் சீனத் தூதரகம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் தூதரகம் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கைக்கான சீனாவின் 500 மில்லியன் யுவான் நிதி உதவித் திட்டத்தின் கீழ் அரிசியை பெற்றுக்கொடுக்க சீனா தீர்மானித்துள்ளது. அதற்கமைய, ஆறு தொகுதி அரிசியை இலங்கைக்கு பெற்றுக்கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த அறு தொகுதியின் முதலாவது மற்றும் இரண்டாவது அரிசி தொகுதிகள் எதிர்வரும் 25 மற்றும் 30ஆம் திகதிகளில் கொழும்பு துறைமுகத்தை வந்தடையுமென சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு கொண்டுவரப்படும் அரிசி தொகையில் 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி தொகையை 'பள்ளி உணவுத் திட்டத்தின்' கீழ் தேவையுடைய குழந்தைகளுக்கு பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# நிலாவரையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வு விவகாரம்

## தவிசாளர் நிரோஷை மீண்டும் மன்றில் முன்னிலையாக பணிப்பு



நிலாவரையில் தொல்லியல் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் தொல்லியல் நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படுத்தியதாக தெரிவித்து, வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்ட பின்னரே வழக்கை மீள முன்னெடுக்கப்பட முடியும் என கடந்த வருட ஆரம்பத்தில் பொலிஸாருக்கு நீதிமன்றம் அறிவுறுத்தியிருந்தது. இந்நிலையில் வழக்கு மீளவும் இன்று (15) மல்லாகம் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

நிலாவரையில் தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கு வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் உள்ளிட்டவர்கள் தடைகளை ஏற்படுத்தினர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு கடந்த வருடம் ஏப்ரல் மாதம் மல்லாகம் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கில் தொல்லியல் திணைக்களத்தின் அரச கருமத்திற்குத் தடை ஏற்படுத்தியதாக மேலும் சிலரை இணைக்கவுள்ளதாகவும் மன்றில் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி விஸ்வலிங்கம் திருக்குமரன் தலைமையிலான சட்டத்தரணிகள் குழாம், தொல்லியல் திணைக்களத்தின் வர்த்தமானியில் நிலாவரைக் கிணறு என்றே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

குற்றவியல் சட்டக்கோவையின் பிரகாரம் சட்ட மா அதிபரிடம் ஆலோசனை பெற்றே மேற்படி வழக்கின் குற்றப்பத்திரத்தை பொலிஸார் தாக்கல் செய்திருக்கவேண்டும்.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதேச சபையின் தலைவர் என்ற வகையில் தவிசாளார் அங்கு என்ன நடக்கின்றது எனக் கேள்வி எழுப்பியமையை அரச கடமைக்கு தடை ஏற்படுத்தியதாகக் கருத முடியாது.

நிர்வாக ரீதியாக இரு அரச நிறுவனங்களுக்கு இடையே எழும் பிரச்சினையை குற்றவியல் சட்டக்கோவையின் பிரகாரம் அணுகமுடியாது. எனவே, இவ்வழக்கினை தள்ளுபடி செய்யவேண்டும் என மன்றில் தமது சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

அதேவேளை, தனியாராக இருந்தாலென்ன, அரச தாபனமாக இருந்தாலென்ன பிரதேச சபையின் அனுமதி பெற்றே எந்தக் கட்டுமானத்தினையும் செய்ய முடியும் என்பதும் சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்டது.

அவ்வழக்கினை கடந்த வருடம் விசாரித்த நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா, பொலிஸார் தாக்கல் செய்துள்ள குற்றவியல் சட்டக்கோவையின் பிரகாரம் முதலாம் எதிராளியாக மன்றில் முன்னிலையாகியுள்ள வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளரை விசாரிப்பதற்கு சட்ட மா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டதாக எங்கும் வெளிப்படுத்தவில்லை.

அத்துடன், தொல்லியல் திணைக்களத்தின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கிணறு என்றே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்ததுடன், தொடர்ந்து இவ் வழக்கினை நடத்துவதாயின் சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெற்று வழக்கினைத் தொடருமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தியிருந்தார்.

பிரதேச சபைத் தவிசாளர் இவ்வழக்கில் மேலதிக விசாரணைகள் தேவைப்படின் தவிசாளர் ஒத்துழைக்க வேண்டும் எனவும் தவிசாளர் ஒரு இலட்சம் ரூபா சொந்தப் பிணையில் செல்வதற்கும் உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், மீளவும் இவ்வழக்கிற்கு வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளரை முதலாவது சந்தேக நபராக அடையாளப்படுத்தி மன்றில் முன்னிலையாகுமாறு கட்டளை அனுப்பப்பட்டுள்ளது. கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் இராணுவத்தினரும் தொல்லியல் திணைக்களமும் இணைந்து நிலாவரையில் சந்தேகத்திற்கிடமான முறையில் அத்திவாரம் போன்று கிடங்குகளை வெட்டிய நிலையில் அங்கு ஏற்பட்ட கடும் எதிர்ப்புகளையடுத்து பொலிஸ் நிலையத்தில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் இணக்கத்தினை ஏற்படுத்துதல் என அழைக்கப்பட்டு பொலிஸ் அதிகாரிகளினால் தவிசாளர் நிலாவரையில் தலையிடக்கூடாது என வலியுறுத்தப்பட்ட நிலையில், தவிசாளர் அதனை ஏற்க மறுத்திருந்தார். இந்நிலையிலேயே இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



பொசன் பூரணை தினத்தை முன்னிட்டு ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகத்தில் அன்னதான நிகழ்வொனறு நேற்று இடம்பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும், பிரதமர் அலுவலக பிரதானியுமான சாகல ரத்நாயக்கவினால் இந்த அன்னதான நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது, சுமார் 3,000 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டுள்ளது.

# மருத்துவரின் வீட்டிலிருந்த நகைகள் திருட்டு

கோண்டாவிலில் மருத்துவரின் வீடு உடைக்கப்பட்டு அங்கிருந்து 8 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் (13) கோண்டாவில் இராசமாணிக்கம் மண்டபத்துக்கு முன்பாக உள்ள வீட்டில் இடம்பெற்றதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை மருத்துவமனையில் சேவையாற்றும் மருத்துவரின் வீட்டிலேயே இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு வீட்டில் உள்ளவர்கள் நிகழ்வொன்றுக்கு சென்று மாலை 5 மணிக்கு திரும்பியபோது வீடுடைத்து நகைகள் திருடப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்

# அநுராதபுரத்தில் 1600 கிலோ கிராம் அரிசி வியாபாரிகளால் பதுக்கல்





(அநுராதபுரம் செய்தியாளர் )

அநுராதபுரம் நகரில் மோற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது விற்பனை செய்யாது பதுக்கிவைக்கப்பட்டிருந்த 1600 கிலோ கிராமிற்கும் அதிகமான அரிசி தொகை நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள நிர்ணய விலைக்கு பொதுமக்களுக்கு விற்பனை நிலையங்களில் அரிசி விற்பனை செய்யப்படுகின்றதா அல்லது அதற்கு மேலதிகமாக விற்பனை செய்யப்படுகின்றதா என்பதை அறிந்துகொள்ளும் நோக்கில் நுகர்வோர் அதிகாரசபையினரால் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் சுற்றிவளைப்புக்கு அமைவாக, நுகர்வோர் அதிகாரசபையின் அநுராதபுரம் பிராந்திய அலுவலக சுற்றிவளைப்பு குழுவினர்களினால் நேற்று அநுராதபுர நகரில் நேற்று சுற்றிவளைப்பு நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது, பெருந்தொகையான அரிசி கைப்பற்றப்பட்டுள்ளது. இதில் சம்பா மற்றும் கீரி சம்பா, சிகப்பு பச்சை அரிசி அடங்குவதுடன் அவற்றில் விற்பனை விலை குறியீட்டு இலக்கம் மற்றும் காலாவதியாகும் திகதிகளும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லையென அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இதுசம்பந்தமாக எதிர்வரும் தினங்களில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு வேலைத்திட்டம் எடுக்கப்படவுள்ளது. இச்சுற்றிவளைப்பு நுகர்வோர் அதிகாரசபையின் அநுராதபுரம் அலுவலக பொறுப்பதிகாரி பீ.சீ.ஏ.பி.பெரேராவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கலஹாவில் காணாமல்போன சிறுமி யாழ். பஸ் தரிப்பிடத்தில் கண்டுபிடிப்பு

கலஹா, ஹயிட் தோட்டத்தில் காணாமல்போன 14 வயது சிறுமி ஆறு நாட்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாக கலஹா பொலிஸார் தெரிவித்தனர்.

இராசலிங்கம் பிரியதர்சினியே இவ்வாறு யாழ்ப்பாண பஸ் தரிப்பிடத்திலிருந்து 11ஆம் திகதி காலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

சிறுமி காணாமல்போனமை தொடர்பில், ஊடகங்களில் வெளியான செய்தியை அவதானித்த வர்த்தகர் ஒருவர், சிறுமி பஸ் தரிப்பிடத்தில் இருப்பதைக் கண்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்துள்ளார்.

சிறுமி கலஹா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டு, அவர் கண்டி வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைக்காக சேர்க்கப்பட்டுள்ளதாகவும் இன்று நீதிமன்ற வைத்தியரிடம் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் என்றும் கலஹா பொலிஸார் தெரிவித்தனர்.

11ஆம் திகதி காலை இதற்கமைய தான் யாழ்ப்பாணத்திலுள்ள தனது நண்பியைத் தேடிச் சென்றதாகவும், செல்லும் வழியில் தனது அலைபேசி செயலிழந்ததால் நண்பியுடன் தொடர்புகொள்ள முடியாமல் பஸ் தரிப்பிடத்தில் காத்திருந்ததாகவும் சிறுமி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

வீட்டாருடன் ஏற்பட்ட மனகசப்பால் தனது ஆடைகளை எடுத்துக்கொண்டு, 5ஆம் திகதி மாலை யன்னல் வழியாக வீட்டிலிருந்து வெளியே பாய்ந்து, திகனையிலுள்ள அவரது நண்பி ஒருவரின் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

அங்கு நான்கு நாட்கள் தங்கியிருந்த குறித்த சிறுமி, அந்த வீட்டிலிலுள்ளவர்களின் அறிவுறுத்தலுக்கமைய தனது வீட்டுக்குச் செல்வதற்காக கண்டி பஸ் தரிப்பிடத்துக்குச் சென்றுள்ளார்.

அப்போது அவரது கையில் 9,000 ரூபா பணம் இருந்ததாகவும், அந்த பணத்தில் 4,000 ரூபா செலவில் அலைபேசி ஒன்றை கொள்வனவு செய்து, தனது வீட்டுக்குச் செல்ல மனமில்லாமல், யாழ்ப்பாணத்திலுள்ள தனது நண்பியின் சகோதரியொருவருக்கு அழைப்பை ஏற்படுத்தி, தனக்கு தொழில் ஒன்றை பெற்றுத்தருமாறு தெரிவித்துள்ளார்.

எனினும், தொழில் செய்வதற்கு வயது போதாது என்றும் அதுவரை விடுதியொன்றில் தங்கியிருக்குமாறும் அச்சகோதரி தெரிவித்ததையடுத்து, அச்சிறுமி யாழ்ப்பாணம் செல்வதற்காக கண்டியிலிருந்து பஸ் ஏறியுள்ளார்.

கண்டியில் 7 மணிக்கு வவுனியா பஸ்ஸில் ஏறி 11 மணியளவில் வவுனியாவை சென்றடைந்துள்ளார். பின்னர் இரவு முழுவதும் வவுனியா பஸ் தரிப்பிடத்தில் தங்கியிருந்த குறித்த சிறுமி அதிகாலை 4.20 மணியளவில் யாழ்ப்பாணம் செல்லும் பஸ்ஸில் ஏறி, யாழில் உள்ள நண்பியின் சகோதரியுடன் தொடர்பை ஏற்படுத்த முயன்றபோது. சிறுமியின் அலைபேசி பெட்டரி செயலிழந்துள்ளது.

இதன்போது பஸ் தரிப்பிடத்துக்கு அருகிலுள்ள கடைக்குச் சென்று, தனது அலைபேசியின் பெட்டரியை சார்ஜ் செய்து தரும்படி கேட்டபோதே, அந்த வர்த்தகர் சிறுமியை அடையாளம் கண்டு பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்துள்ளார்.

பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கமைய, குறித்த சிறுமியின் சகோதரி மற்றும் உறவினர்கள் இருவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று, சிறுமியை அழைத்து வந்து, கலஹா பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை, இச்சம்பவம் தொடர்பில் சிறுமியின் சகோதரி மற்றும் தாயிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதுடன், கலஹா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# தகைமை ஆவணங்களை சமர்ப்பிக்குக!

## பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கான அறிவிப்பு

தகைமைகள் அடங்கிய விண்ணப்பப் படிவங்களை பொலிஸ் மா அதிபரிடம் சமர்ப்பிக்குமாறு அனைத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவிக்கப் பட்டுள்ளது.

இதுதொடர்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

குறித்த விண்ணப்பப்படிவத்தில் தமது சேவைக்காலம், பணிபுரியும் இடம் மற்றும் தொழில் தகைமை என்பன உள்ளடக்கப்பட வேண்டுமென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளின் நியமனத்திற்காக உரிய திட்டமொன்றை வகுக்கும் நோக்கில் இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவங்கள் அனுப்பிவைக்க வேண்டும்.

பொலிஸ் நிலையங்களுக்கு பொறுப்பதி காரிகளை நியமிப்பதற்கான உரிய, முறையான திட்டமொன்று பொலிஸ் திணைக்களத்திடம் இல்லை என அண்மையில் வெளிக்கொணரப்பட்டது.

பொலிஸ் மா அதிபரினால் பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது.

# நுவரெலியா எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அமைதியின்மை





(செ.திவாகரன்)

எரிபொருளுக்கான தட்டுப்பாடு தொடர்ந்து வருகின்ற நிலையில், நுவரெலியா எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் திடீரென நேற்று (14) ஒன்றுகூடியிருந்தனர். இதனையடுத்து அந்த பிரதேசத்தில் பதற்ற நிலை ஏற்பட்டது.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அவசர சேவைகளுக்கு மாத்திரமென வைக்கப்பட்டிருந்த பெற்றோலை எரிபொருள் நிலைய ஊழியர் ஒருவரின் உதவியுடன் தனியார் ஒருவருக்கு முச்சக்கரவண்டியினுள் கேன்களை வைத்து 15 ஆயிரம் ரூபாவுக்கு மேலாக பெற்றோலை வழங்கியமையால் வரிசையில் காத்திருந்து எரிபொருள் கிடைக்காதவர்கள் எரிபொருள்பெற முயன்றபோது, எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இடையில் முறுகல் நிலை ஏற்பட்டதென இதன்போது எட்டு மணித்தியாலயம் வரிசையில் காத்திருந்த ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

சாதாரண நேரங்களில் எரிபொருள் நிரப்பச் சென்றால் எரிபொருள் இல்லை என ஊழியர்கள் தெரிவிப்பதாகவும், நள்ளிரவு நேரங்களில் சில தனியார்களுக்கு அதிக விலையிலும் அதிக அளவிலும் எரிபொருட்களை வழங்குவதாகவும் கூறினார். இதன்போது சம்பவ இடத்திற்கு வருகை தந்த நுவரெலியா பொலிஸார் பொதுமக்களுடன் கலந்துரையாடி மக்களை கலைந்து செல்லுமாறு எச்சரித்த நிலையில் அனைவரும் கலைந்து சென்றனர்.

குழந்தை பெறுதலை தடுக்கும் வகையில் சட்டவிரோத சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டதாக போலியாக குற்றஞ்சாட்டப்பட்ட குருநாகல் போதனா வைத்தியசாலையின் மகப்பேறு பிரிவு விசேட வைத்தியர் ஷாபி ஷிகாப்தீன் மொஹமட்டின் சம்பள நிலுவையை வழங்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, அவருக்கு நிலுவையிலுள்ள சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூ.26,75,816.48ஐ வழங்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அவரது இடைநிறுத்தப்பட்ட நிலுவை சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை ஜூலை 10 ஆம் திகதிக்கு முன்னர் மீளச் செலுத்துமாறு அண்மையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவை அடுத்து சுகாதார அமைச்சு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

சுகாதார அமைச்சு வழங்கிய இந்த நிலுவைத் தொகையை ஏற்காமல், இலங்கையில் நிலவும் அத்தியாவசிய மருந்து தட்டுப்பாட்டுக்கு தீர்வாக அந்த பணத்தை பயன்படுத்த முடிவு செய்துள்ளதாக வைத்தியர் ஷாபி ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இதன்படி, அந்த பணத்தில் நாட்டுக்குத் தேவையான அத்தியாவசிய மருந்துகளை கொள்வனவு செய்து வைத்தியசாலைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

குருநாகல் போதனா வைத்தியசாலையின் மகப்பேறு மற்றும் பெண்ணோயியல் பிரிவுக்கு வருகை தந்த பெருமளவிலான பெண்களுக்கு தெரியாமல் கருத்தடை செய்யப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டு விசேட வைத்தியர் ஷாபி ஷிஹாப்தீன் மொஹமட் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டிருந்தார். அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

சந்தேகத்திற்கு இடமான வகையில் சொத்து சேர்த்த குற்றச்சாட்டின் பேரில் 2019 ஏப்ரல் 25ஆம் திகதி அவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

400 மில்லியனுக்கும் அதிகமான பெறுமதியான சொத்துகளை அவர் வைத்திருப்பதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும், அவை ஏதேனும் தீவிரவாத அல்லது பயங்கரவாத குழுவினால் பெறப்பட்டதா என விசாரிக்கும் நோக்கில் அவரை கைதுசெய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மே 27, 2019 அன்று பொலிஸ் குற்றப் புலனாய்வுத்துறை ஷாபியிடம் விசாரணையைத் தொடங்கியது.

இதன்படி, சம்பந்தப்பட்ட வைத்தியரால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் "கருத்தரிக்காமை சத்திரசிகிச்சைகள்" தொடர்பில் ஏதேனும் முறைப்பாடுகளை முன்வைக்குமாறு அப்போதைய பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர, அதே ஆண்டு மே 26 ஆம் திகதி பொதுமக்களிடம் பகிரங்கமாக கோரிக்கை விடுத்திருந்தார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜூன் 15ஆம் திகதி, புதன்கிழமை

# மருத்துவர் ஷாபிக்கொரு மலர்ச்செண்டு!

எவ்வாறாயினும், இந்த வழக்கின் நீண்ட விசாரணையின் பின்னர், மேன்முறையீட்டு நீதிமன்றம், விசேட வைத்தியரான ஷாபி ஷிஹாப்தீன் மொஹமட்டை மீள கடமைக்கு அழைக்க தீர்மானித்ததுடன், அந்தக் காலப்பகுதியில் வழங்கப்படாத சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் அனைத்தையும் வழங்குமாறு உத்தரவிட்டது.

இதனையடுத்து அவருக்கு நிலுவைத் தொகையை வழங்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்தது. இப்போது அதனையே வைத்தியர் ஷாபி, மருந்துகளை வாங்குவதற்கு செலவிட தீர்மானித்துள்ளார்.

ஷாபியின் இந்த செயற்பாட்டிற்கு சமூக ஊடகங்களில் பெரும் வரவேற்பு கொடுக்கப்பட்டுள்ளது. சிங்கள சமூகத்தில் பலர் ஷாபிக்கு ஆதரவாகவும், இது இனவாதத்திற்கு வழங்கப்பட்ட அடியென்றும் பதிவிட்டு மகிழ்வதை காணமுடிகின்றது. ஆனால், இந்த மகிழ்வாளர்கள் அனைவரும் ஷாபி பகிரங்கமாக, இன ரீதியாக அவமானப்படுத்தப்பட்டபோது வாளாவிருந்தவர்கள் தான்.

வைத்தியர் ஷாபிக்கு எதிராக முன்னணியில் நின்று செயற்பட்டவர் வைத்தியர் சன்ன ஜெயசுமண. பின்னாளில் சுகாதார அமைச்சரான சன்ன, தொலைக்காட்சி பேட்டியொன்றில் பேசும்போது வைத்தியர் ஷாபியை அவமானப்படுத்தி பேசியது மட்டுமல்லாமல், சிங்கள இனத்தை அழிக்க முற்பட்டவரென்று பகிரங்கமாகவே முத்திரை குத்தினார். இந்த அவப்பேச்சுக்காகவாவது சன்ன ஜெயசுமண இப்போது கைதுசெய்யப்பட வேண்டும்.

"இலங்கையில் என்னை விட இனவாதத்தின் உச்சத்தால் பாதிக்கப்பட்டவர்கள் யாரும் இல்லை. இனவாதத்தால் முன்னோக்கி செல்ல முடியாது என்பதை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். எனவே, இனவாதமற்ற நாட்டை உருவாக்க உதவ வேண்டும். இனவாதத்தால் அடிபட்டதற்காக நான் சபிக்கவில்லை. யாரையும் வெறுக்கவில்லை. நான் சபிக்க வெறுக்கப் போனால் எத்தனை பேர் மீது கோபப்படுவேன்? நான் சுதந்திரமாக இருக்க வேண்டும். நான் என் வாழ்க்கையில் சுதந்திரமாக இருக்க விரும்புகிறேன். எனக்கு யார் மீதும் கோபம் இல்லை. ஆனால், இனி இது போன்ற அசிங்கமான செயல்களை செய்ய வேண்டாம் என அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்" என்று வைத்தியர் ஷாபி கூறியுள்ள வார்த்தைகளில் பெரும் அர்த்தம் பொதிந்து நிற்கிறது.

இந்தளவு நெருக்கடியான காலகட்டத்திலும் தமிழர் பிரதேசத்தில் விகாரைகளை கட்டுவது, தமிழர் காணிகளை ஆக்கிரமிப்பது என்று பிசியாக இருக்கும் பேரினவாதிகள், ஷாபி காட்டிய மனிதாபிமானத்தை மதிக்கப்போவதில்லை. ஆனால், தான் வணங்கும் இறைவனுக்கு பயந்தும், நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் நோக்கிலும் வைத்தியர் ஷாபி கொடுத்ததை வரவேற்றுப் பாராட்டுகிறோம்.

இப்படி நடந்துகொண்டதன் மூலம் வைத்தியர்களின் புனிதமான எண்ணத்தை வெளிக்காட்டியிருக்கிறார் ஷாபி. அத்துடன் சிங்கள பேரினவாதிகளின் முகத்தில் அழிக்க முடியாத கரியையும் அவர் பூசியுள்ளார். மே 9 ஆம் திகதி தனது சொந்த வீடு எரிவதை தொலைக்காட்சியில் பார்த்தபோது பட்ட வேதனையைவிட, வைத்தியர் ஷாபி இந்த நிலுவைப்பணத்தை மக்களுக்காக வழங்கும் செய்தியை பார்த்து மனதுக்குள் வெந்திருப்பார் சன்ன ஜெயசுமண.

வைத்தியர் ஷாபி சிங்கள பேரினவாதத்தினால் முற்றுமுழுதாக துவம்சம் செய்யப்பட்ட சம்பவத்தை போன்று இனியொரு அநியாயம் எவருக்கும் நடக்கக் கூடாது. ஆனால், இந்த நாட்டில் அப்படியெல்லாம் நம்பவும் முடியாது. இன்றைய தினத்தில் வைத்தியர் ஷாபிக்கு வாழ்த்தை மட்டும் தெரிவித்துவைக்க விரும்புகிறோம்.

# தங்கம்மா அப்பாக்குட்டி நினைவு நாள் இன்று



தங்கம்மா அப்பாக்குட்டி (7 ஜனவரி, 1925 – ஜூன் 15, 2008 ) இலங்கையில் நன்கு அறியப்பட்ட சமூக சேவையாளரும், சமயச் சொற்பொழிவாளரும் ஆவார். ஈழத்தில் சைவத்துக்கும், தமிழுக்கும் பெரும் தொண்டாற்றியவர். ஏழை மக்களுக்கும், அனாதைப் பிள்ளைகளுக்கும் ஆதரவு இல்லங்கள் அமைத்துச் சேவையாற்றி வந்தார். யாழ்ப்பாணம் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராகச் செயற்பட்டு வந்தார். "சிவத்தமிழ்செல்வி" என்று அழைக்கப்பட்டு வந்தார்.

ஜனவரி 7, 1925 இல் யாழ்ப்பாண மாவட்டம், தெல்லிப்பழையில் அப்பாக்குட்டி- தையற்பிள்ளை தம்பதிகளுக்குப் பிறந்த தங்கம்மா அப்பாக்குட்டி 1929 ஆம் ஆண்டு மல்லாகம் அமெரிக்க மிஷன் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியை ஆரம்பித்தவர், பின்னர் தனது இடைநிலைக் கல்வியை மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையில் தொடர்ந்தார். 1940 ஆம் ஆண்டு க.பொ.த. (சா/த) (ஆண்டு-10) பரீட்சையில் சித்தியடைந்ததையடுத்து, 1941 ஆம் ஆண்டு சுன்னாகம் இராமநாதன் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியப் பயிற்சிக்குச் சேர்ந்தார்.

### ஆசிரியப் பணி

1946 மட்டக்களப்பு சென். சிசிலியா ஆங்கிலப் பாடசாலையில் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். அதனைத் தொடர்ந்து 1949 ஆம் ஆண்டு கொழும்பு பாத்திமா பெண்கள் பாடசாலையில் ஆசிரியர் பதவி ஏற்றார்.

தமிழையும், சைவ சமயத்தையும் முறையாகக் கற்று 1952 ஆம் ஆண்டு பாலபண்டிதராகத் தேர்வடைந்த இவர், 1958 இல் தமிழகத்தில் சைவப்புலவர் பட்டத்தையும் பெற்றார். இவரது 31 ஆண்டுகள் ஆசிரியப் பணியில் கடைசி 12 ஆண்டுகள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி 1976 இல் ஓய்வுபெற்றார்.

### சைவப்பணி

யாழ். பகுதியில் இறைவழிபாட்டை மேம்படுத்தும் வழியில் யாழ்ப்பாணத்தில் ஒரு சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியதில் தங்கம்மா அப்பாக்குட்டிக்கு முதன்மையான பங்குண்டு. "பண்டிதை" என அழைக்கப்பட்டுவந்த தங்கம்மா 1950-60களில் இலங்கை வானொலியின் மாதர் பகுதி உட்பட பல இடங்களில் சமயச் சொற்பொழிவுப் பணிமூலம் சமய வளர்ச்சிக்குத் தனது தொண்டு செய்யும் வகையில் தனது சமயப்பணியைத் தொடங்கினார். தமிழ்நாடு சிதம்பரத்திலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் 1965 ஆம் ஆண்டு உரையாற்றினார். 1970களில் சிறிய கோயிலாக இருந்த தெல்லிப்பழை துர்க்கை அம்மன் திருத்தலத்தைக் கட்டியெழுப்பி ஆலயப் பணியுடன், மக்கள் தொண்டும் ஆற்றி வந்தார்.

ஈழத்துச் சிதம்பரம் என்றழைக்கப்படும் காரைநகர் சிவன் கோயிலில் ஆற்றிய சிறப்புச் சொற்பொழிவுக்காக "சிவத்தமிழ்ச் செல்வி" என்ற பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது. மேலும், "திருவாசகக் கொண்டல்", "செஞ்சொற் செம்மணி", "சிவஞான வித்தகி", "துர்க்கா புரந்தரி" போன்ற பதினைந்திற்கும் மேற்பட்ட பட்டங்களையும், பதக்கங்களையும் பெற்றுக்கொண்டார்.

தங்கம்மா அப்பாக்குட்டியின் கந்தப்புராண சொற்பொழிவு நூலுக்குச் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்ததுடன், இவரின் முயற்சியில் பல அறநெறி நூல்களும் வெளியிடப்பட்டன.

### சமூகப் பணி

தெல்லிப்பழையில் அமைந்துள்ள துர்க்கை அம்மன் கோயில் நிர்வாகத் தனாதிகாரியாக நியமிக்கப்பட்ட இவர் 1977ஆம் ஆண்டு ஆலய நிர்வாகப் பதவியை முழுமையாக ஏற்றுக்கொண்டார். இவரது காலத்தில் இராஜகோபுரம் கட்டப்பட்டதோடு, சித்திரத் தேரும் சிறப்பாக உருவாக்கப்பட்டது. அவை மட்டுமன்றி மண்டபங்களும், அறச்சாலைகளும், நந்தவனமும், தீர்த்தத் தடாகமும் என சிறந்த அமைப்புகளோடு ஆலயத்தை ஒரு சமூகப்பணியின் நிறுவனமாகவும் உருவாக்கினார்.

ஆலய வளாகத்தில் ஆதரவற்ற சிறுமிகளுக்கென "துர்க்காபுரம் மகளிர் இல்லம்" என்ற பெயரில் ஆதரவு நிலையம் ஒன்றை நிறுவி சேவையாற்றி வந்தார். பசித்துவரும் ஏழைகளின் வயிற்றுப்பசி தீர்க்கவும், தொண்டர்தம் பசியாற்றவும் "அன்னபூரணி அன்னதான மண்டபம்" அமைத்தார். அத்துடன் கல்யாண மண்டபம் ஒன்றை நிறுவிக் குறைந்த செலவில் திருமணங்களைச் செய்ய உதவினார். ஈழப்போரில் அகதிகளாக்கப்பட்ட பல வயோதிபர்களுக்குக் கோயிலில் அடைக்கலம் கொடுத்தார். சிவத்தமிழ்ச் செல்வி அன்னையர் இல்லம், நல்லூரில் துர்க்கா தேவி மணிமண்டபம் என்பனவற்றை ஆரம்பித்துத் தொண்டாற்றினார்.

### மறைவு

திடீரென நோய்வாய்ப்பட்ட சிவத்தமிழ்ச் செல்வி சில வாரங்களாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், ஜூன் 15, 2008 நண்பகல் 12.15 மணியளவில் காலமானார். 16 ஜூன் மாலை 4:00 மணிக்குத் தெல்லிப்பழை இந்து மயானத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் இவரது இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றன .

தங்கம்மா அப்பாக்குட்டியின் மறைவுக்கு அப்போதைய தமிழ்நாடு முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி இரங்கல் தெரிவித்திருந்தார் .

### விருதுகள்

அமெரிக்கா ஹவாய் சிவாய சுப்ரமணியசுவாமி ஆசிரமம் 2005 ஆம் ஆண்டுக்கான சிறந்த இந்துப்பணி விருதை அம்மையாருக்கு வழங்கியது.

யாழ். பல்கலைக்கழகம் 1998 இல் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி அம்மையாரைச் சிறப்பித்தது.

2003இல் வவுனியாவில் இடம்பெற்ற தமிழிலக்கியப் பெருவிழாவில் வட, கிழக்கு மாகாண ஆளுநர் விருது வழங்கப்பட்டது.

இலங்கை அரசினால் கலாசூரி என்ற பட்டமும் வழங்கி இவர் கௌரவிக்கப்பட்டார்.

# அளுத்கம – தர்ஹா நகர் கலவரத்தின் ஒரு துளி...

## ஜனாஸா வாகனம் மீது தாக்குதல்; பேரினவாதப் பெண்களின் வெறிச்செயல்..

15.06.2014. இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் மறக்க முடியாத நாட்களுள் ஒன்று...

கறுப்பு ஜூன் என்று சொல்லும் அளவுக்கு இலங்கை வரலாற்றில் கறை படிந்த நாள் இது.

ஆம்...

இதுபோன்ற ஒரு நாளில்தான் தீக்கிரையாக்கப் பட்டன தர்ஹா நகர் - அளுத்கம உள்ளிட்ட ஊர்கள்.

பொதுபல சேனா களமிறங்க பற்றி எரிந்தன அவ்வூர்கள்.

குறித்த தினத்தில் அளுத்கமவில் ஞானசார தேரர் கூட்டம். அதுவே வித்திட்டது கலவரத்துக்கு...

அளுத்கமவில் பௌத்த தேரர் ஒருவர் முஸ்லிம் நபரால் தாக்கப்பட்டார் என்று குற்றம் சுமத்தி - அதற்குக் கண்டனம் தெரிவிக்கும் போர்வையில்தான் அந்தக் கூட்டம்.

அதில் முஸ்லிம்களுக்கு எதிராக ஞானசார தேரர் மிகவும் ஆக்ரோஷமாக உரை நிகழ்த்தினார்.

முஸ்லிம்களை அழிக்க வேண்டும் - அவர்களின் சொத்துகளை நாசம் செய்ய வேண்டும் - அவற்றை சூறையாட வேண்டும் என்ற எண்ணம் பொங்கி எழுகிறது அதில் கலந்துகொண்ட சிங்கள இளைஞர்களுக்கு...

கூட்டம் முடிந்து திட்டமிட்டபடியே கலவரம்.

பற்றி எரிகின்றன வீடுகள் - வர்த்தக நிலையங்கள் - வாகனங்கள். இப்படி எல்லா சொத்துகளும்.

அந்தக் கயவர்களின் கைகளில் பெற்றோல்- மண்ணெண்ணெய் போத்தல்கள் - கத்தி - வாள்கள்.

அவர்களின் பாதுகாப்புக்காக தலைகளில் தலைக்கவசங்கள்.

முன்கூட்டியே திட்டமிடப்பட்ட கலவரம் என்பதற்கு சரியான ஆதாரம் இது.

எல்லா வீடுகளுக்குள்ளும் பேரினவாதிகள் நுழைய... வீடுகளை விட்டுத் தப்பி ஓடுகிறார்கள் முஸ்லிம்கள்.

காட்டுக்குள் - பள்ளிவாசல்களுக்குள்.

சூறையாடுகிறார்கள் சொத்துகளை... தீ வைக்கிறார்கள் தூக்கிச் செல்ல முடியாத சொத்துகளுக்கு.

வர்த்தக நிலையங்களிலும் இதே நிலைதான்.

பள்ளிவாசலையும் மக்களையும் பாதுகாத்து உயிரை விட்டனர் சகோதரர்கள். ஆம் -

சுட்டுக் கொல்லப்பட்டனர் இரு முஸ்லிம் சகோதரர்கள்.

கால்களை இழந்தனர் மேலும் இருவர்.

பள்ளிவாசலையும், தம் மக்களையும் பாதுகாப்பதற்காகப் போராடியவர்கள் அவர்கள்.

படையினர் பாதுகாப்புக்கு நிற்க... பார்த்துக் கொண்டு நிற்க... ஆற அமர அரங்கேறுகிறது இந்தக் கொடூரம்.

அன்று இரவு முழுவதும். மறுநாள் பகல் முழுவதும்....

அதற்கு அடுத்த நாளே முடிவுக்கு வருகிறது கலவரம். அப்போது எல்லாமே சாம்பல்.

**கலவர பூமிக்குள் நுழைவதற்கு...**

கலவர பூமிக்குச் சென்று - அங்கு நடப்பவற்றைக் கண்டு - செய்தி திரட்டும் முயற்சியில் பல ஊடகவியலாளர்கள்...

அவர்களுள் நானும் ஒருவன்...

இலகுவான காரியமல்ல. கடும் ரிஸ்க்.

இருந்தாலும், முயற்சி...

முதலில் உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள். முடியாவிட்டால் திரும்பி வந்துவிடுங்கள்.

அலுவலகத்தின் அறிவுரை இது.

நானும் சாரதியும் மட்டுமே...

களுத்துறைவரை மட்டுமே பயணம்.. களுத்துறை பள்ளிவாசல் சந்திவரை...

அங்கிருந்து முன்னோக்கிச் செல்ல முடியுமா...?

ஆராய்கிறோம். விசாரிக்கிறோம் அங்குள்ள முஸ்லிம்களிடம்...நாங்கள் மீடியா என்பதைக் கூறி...

தடுக்கிறார்கள். உயிருக்கு உத்தரவாதமில்லை என்கிறார்கள்.

ஆனால், எப்படியாவது நடப்பதை அறிந்தாக வேண்டும். நாடுகிறோம் அவர்களின் உதவியை.

அதற்கு அவர்கள் தயார். வேறு வழியில்...

மீடியா என்றதும் மகிழ்ச்சி அவர்களுக்கு...

தங்களுக்கு நடக்கும் அநியாயம் உலகிற்குத் தெரிய வேண்டும் என்ற அவா.

பிரதான வீதி அருகே ஒரு வீடு. அழைத்துச் செல்கிறார்கள் அங்கே எங்களை.

அதிகமான ஆண்கள் அங்கு. தகவல்களை திரட்டிய வண்ணம்...

எங்களை அவர்களிடம் அறிமுகப்படுத்தி வைக்க... இலகுவாகிறது எங்கள் பணி.

அவர்கள் ஊடாகவே கிடைக்கின்றன அதிகமான தகவல்கள். ஊடகவியலாளர்கள்போலவே அவர்கள். திரட்டித் திரட்டித் தருகிறார்கள் தகவல்களை. கைத்தொலைபேசிகள் ஊடாக..

ஊடக மத்திய நிலையம்போல்தான் அந்த வீடு.

(07ஆம் பக்கம் பார்க்க...)




## நக்கல் நமசிவாயம்

அரசாங்க ஊழியருக்கு வெள்ளிக்கிழமை லீவு கொடுத்தா, இனி அவங்கள் வீக்கெண்ட் ட்ரிப் அடிக்க வெளிக்கிடுவாங்கள்..



## இன்றைய நாளில்...

* 1502 – கிறிஸ்டோபர் கொலம்பஸ் தனது நான்காவது கடற்பயணத்தின் போது மர்தினிக் தீவில் கால் வைத்தார்.
* 1667 – முதலாவது மனிதக் குருதி மாற்றீடு மருத்துவர் சென். பாப்டிஸ்ட் டெனிஸ் என்பவரால் மேற்கொள்ளப்பட்டது.
* 1752 – பெஞ்சமின் பிராங்க்ளின் மின்னல் ஒரு மின்சாரம் என்பதை நிறுவினார்.
* 1844 – இயற்கை இறப்பர் பதப்படுத்தும் முறை சார்ல்ஸ் கூடியர் என்பவரால் காப்புரிமம் பெறப்பட்டது.
* 1846 – இலங்கையின் அரச ஆசியர் சமூகம் 'ஜேர்னல்' என்ற தனது முதலாவது இதழை வெளியிட்டது.
* 1878 – குதிரை ஓடுகையில் அதன் 4 கால்களும் தரையில் படாதென நிறுவும் புகைப்படங்களை எதுவார்து மைபிரிட்ச் எடுத்தார். இவ்வாய்வே பின்னர் அசையும் திரைப்படம் உருவாக மூலமாக அமைந்தது.
* 1954 – ஐரோப்பிய உதைபந்துச் சங்கங்களின் ஒன்றியம் சுவிட்சர்லாந்தின் பாசல் நகரில் ஆரம்பிக்கப்பட்டது.
* 1991 – பிலிப்பைன்ஸில் பினாடூபோ எரிமலை வெடித்ததில் 800 பேருக்கு மேல் உயிரிழந்தனர்.

# அமைச்சரவைத் தீர்மானங்கள்




### 01. பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளல் - 2023

பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்தும்போது மேலெழுந்த பிரச்சினைகள் தொடர்பாக அதிபர்கள், சுற்றறிக்கை திருத்தக் குழு, அமைச்சின் விசாரணைப் பிரிவு, இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளிட்ட பல்வேறு தரப்பினர்களால் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களைப் போலவே, அதுதொடர்பான நீதிமன்றத் தீர்ப்புகளையும் கருத்தில்கொண்டு, திருத்தப்பட்ட புதிய சுற்றறிக்கையொன்று கல்வியமைச்சால் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2023ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து வரும் காலங்களில் பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக குறித்த திருத்தப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உட்பிரிவுகளை ஏற்புடையதாக்கிக் கொள்வதற்காக கல்வியமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 02. வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள கட்டளைகளை நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்

1979ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகள் உள்ளிட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் 02உம், 2007ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க வியாபாரப் பண்ட அறிவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் விதிக்கப்பட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் 06உம், 1962ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 02/2022ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்பு கட்டளை விதிக்கப்பட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலொன்றை நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 03. 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் உறுப்புரையின் கீழ் புதிய ஒழுங்குவிதியொன்றை வெளியிடல்

வெளிநாட்டுச் செலாவணிப் பாய்ச்சலில் இடம் பெறும் ஒருசில மூலதனக் கொடுக்கல் வாங்கல்களுக் காக 06 மாதகாலத்திற்கு கட்டுப்பாடுகளை விதிப்பதற்காக 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தில் 22ஆம் உறுப்புரையின் கீழ் ஒழுங்குவிதியொன்றை வெளியிடுவதற்காக 2021 டிசம்பர் மாதம் 06ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் மூலம் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதி செல்லுபடியாகும் காலம் 2022 ஜூலை மாதம் 01ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. குறித்த கட்டளை மூலம் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவது உகந்ததென இலங்கை மத்திய வங்கியின் நாணய சபை பரிந்துரைத்துள்ளது. அதற்கமைய, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் உறுப்புரையின் கீழ் புதிய ஒழுங்குவிதியொன்றை வெளியிடுவதற்கும், பின்னர் குறித்த ஒழுங்குவிதிகளை அங்கீகாரத்திற்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காகவும், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 04. சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரிச் சட்டம்

2022ஆம் ஆண்டு வரவு - செலவுத்திட்ட முன்மொழிவின் மூலம் சமூகப் பாதுகாப்பு நிதியமொன்றை அறிமுகப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதற்கமைய, ஆண்டொன்றுக்கான மொத்த விற்பனைப் புரள்வு 120 மில்லியன்களை அதிகரிக்கும் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள், சேவை வழங்குநர்கள், மொத்த வியாபாரிகள் மற்றும் சில்லறை வியாபாரிகளுக்கு 2.5 சதவீதத்தின் கீழ் புதிய வரியாக சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரியை அறிமுகப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்காக சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது.

குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 05. அங்கம்பொர (உடற் போர்) தற்காப்புக் கலையைப் பாதுகாத்து மேம்படுத்தல்

எமது நாட்டில் காணப்படுகின்ற பாரம்பரிய விளையாட்டாகவும், தற்காப்புக் கலையாகவும், கலாசார மரபுரிமையாகவும் காணப்படுகின்ற அங்கம்பொர (உடற் போர்) தற்காப்புக் கலையை மேம்படுத்துவதற்கு விளையாட்டுகள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அங்கம்பொர (உடற் போர்) தற்காப்புக் கலைக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவதற்காக 2019ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருப்பினும், அதற்கான வர்த்தமானி அறிவித்தல் இதுவரை வெளியிடப்படவில்லை. அதனால், அங்கம்பொர (உடற் போர்) தற்காப்புக் கலையைப் பாதுகாத்து மேம்படுத்தும் நோக்கில், ஆங்கிலேய காலனித்துவ ஆட்சியாளர்களால் விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்காக விளையாட்டுகள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 06. தொழில் புரிவதற்கோ அல்லது வேறு பயனுறுவாய்ந்த பணிகளில் ஈடுபடுவதற்காக அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறை வழங்கல்

கல்வி அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்புக் காக அரச உத்தியோகத்தர் ஒருவர் தனது பணிக்காலத்தில் உயர்ந்தபட்சம் 05 வருடங்கள் சம்பளமற்ற விடுமுறையைப் பெற்றுக் கொள்வதற்கு தற்போது ஏற்பாடுகளின் பிரகாரம் இயலுமை உள்ளது. ஆனாலும், குறித்த காலப்பகுதியில் ஓய்வூதியக் கணிப்பைக் கருத்தில் கொள்ளாமை, சிரேஷ்டத்துவத்தைப் பாதிக்கின்றமை மற்றும் ஏனைய நிபந்தனைகளால் அரச உத்தியோகத்தர்கள் அவ்வாறான விடுமுறையைப் பெறுவதில் ஆர்வம் காட்டுவதில்லை.

நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நிலைமையைக் கருத்தில்கொண்டு, அரச உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் தொழில் புரிவதற்கோ அல்லது வேறு பயனுறுதிவாய்ந்த பணிகளில் ஈடுபடுவதற்காக அவர்களின் சிரேஷ்டத்துவம் மற்றும் ஓய்வூதியத்திற்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் தற்போதுள்ள ஏற்பாடுகளில் திருத்தம் செய்யப்பட்டு குறித்த சுற்றறிக்கை ஆலோசனைகளை வெளியிடுவதற்காக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 07. பயிர்ச்செய்கை மற்றும் விவசாய நட வடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்காக அரச உத்தியோகத்தர்களை வலுப்படுத்தல்

தற்போது நிலவுகின்ற எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பயணிகள் போக்குவரத்துத் தடைகள் ஏற்பட்டுள்ளதுடன், அந்நிலைமையால் அரச ஊழியர்களுக்கு தமது போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் தோன்றியுள்ளன. இந்நிலைமையில் வாரத்தில் கடமையாற்றும் ஒரு நாள் அரச விடுமுறையை வழங்கி தொடர்ந்து வரும் காலங்களில் ஏற்படக் கூடுமென எதிர்பார்க்கின்ற உணவுத் தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக தமது வீட்டுத்தோட்டங்களில் அல்லது வேறு இடங்களில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கான வசதிகளை வழங்குவது உகந்ததெனக் கண்டறியப்பட்டுள்ளது.

நீர் வழங்கல், மின்சார விநியோகம், சுகாதாரம், பாதுகாப்பு சேவைகள், கல்வி, போக்குவரத்து, துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் போன்ற அத்தியாவசிய சேவைகளை வழங்கும் அரச நிறுவனங்கள் தவிர்ந்த ஏனைய அரச நிறுவனங்களை எதிர்வரும் 03 மாதங்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் மூடுவதற்காக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# சட்டவிரோதமாக மரக்குற்றிகளை ஏற்றிச்சென்ற லொறி விபத்து

## ஒருவர் காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதி





(ஜூட் சமந்த)

அனுமதிப் பத்திரமின்றி மரக்குற்றிகளை ஏற்றிச் சென்றுக் கொண்டிருந்த லொறி, பொலிஸாரிடமிருந்து தப்பித்துச்சென்ற போது ஏற்பட்ட விபத்தில் ஒருவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர். புத்தளம், நுர் நகரப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் (13) இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அனுமதிப் பத்திரமில்லாத இந்த தேக்கு மரக்குற்றிகள் லொறியில் எடுத்துச் செல்லப்படுவதாக புத்தளம் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு தகவல் கிடைத்துள்ளது. அதற்கமைய, குறித்த லொறி பயணித்த வீதியின் இடையில் பொலிஸ் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன் குறித்த லொறியை நிறுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தாலும் குறித்த லொறி பொலிஸாரிடமிருந்து தப்பித்துச் சென்றுள்ளது.

தப்பித்துச் சென்ற லொறியை பின்தொடர்ந்து பொலிஸாரும் சென்றுள்ளனர். பொலிஸாரிடமிருந்து தப்பிப்பதற்காக அதிக வேகத்தில் மாற்று வீதியினூடக பயணித்துக்கொண்டிருந்த லொறி, மின்கம்பத்தில் மோதி பின்னர் மதிலில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்வாறு விபத்துக்குள்ளான மரக்குற்றிகளை எடுத்துச்சென்ற லொறியில் இருவர் பயணித்துள்ளனர். இருவரில் ஒருவர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளார். காயங்களுக்குள்ளான நபர் சிகிச்சைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மற்றைய சந்தேகநபர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார். லொறி அதிக வேகத்தில் மோதியதால் மின் கம்பம் உடைந்துள்ளது. இதன் காரணமாக சில மணி நேரம் அந்தப் பிரதேசத்தில் மின் தடை ஏற்பட்டுள்ளது.

லொறி மற்றும் அதிலிருந்த தேக்கு மரக் குற்றிகள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ள மரக் குற்றிகளின் எண்ணிக்கை இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை. புத்தளம் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# காசிமிய்யா மத்ரஸாவுக்கு புதிதாக அனுமதிபெற்ற மாணவர்களுக்கு வரவேற்பு





(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் காசிமிய்யா மத்ரஸாவுக்கு புதிதாக அனுமதி பெற்ற மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு, மத்ரஸாவின் மஹ்மூத் ஹஸரத் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் புத்தளம் கிளைத் தலைவரும், காசிமிய்யா அரபுக் கல்லூரி அதிபருமான அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் தலைமையில் இடம்பெற்ற அந்நிகழ்வில் காசிமிய்யாவின் உப அதிபர் அஷ்ஷெய்ஹ் எம்.எச்.எம். மர்சூக்மக்கி உட்பட உஸ்தாத்மார்களும் ஆசிரியர்களும் கலந்து சிறப்பித்தனர். அத்துடன், நிகழ்வில் சிறப்புச் பேச்சாளராக அஷ் ஷெய்ஹ் ஏ.ஓ. அப்துல் கஹ்ஹார் காசிமிமதனி கலந்து கொண்டார்.



# கப்பம் கோரி பெண் கடத்தல் ; நாலவர் கைது!

## வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி பணம் பெற்றதாக கடத்தப்பட்டவர் மீது குற்றச்சாட்டு

**(வவுனியா நிருபர், ஹேமந்த லியனபத்திரண)**

வவுனியா, பூவரசங்குளம் பகுதியில் பெண் ஒருவர் கடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியாவைச் சேர்ந்த 55 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளதுடன், கடந்த 11ஆம் திகதி இவர் இனந்தெரியாத சிலரினால் இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடத்தப்பட்ட இப்பெண் வெளிநாடுகளுக்கு தொழிலாளர்களை அனுப்பிவைக்கும் முகவராவார். கடந்த 5ஆம் திகதி தொழிலாளர்கள் இருவரை வெளிநாட்டுக்கு அனுப்பிவைப்பதற்காக கொழும்புக்கு வந்துவிட்டு மீண்டும் கடந்த 11ஆம் திகதி வவுனியாவை நோக்கி பயணித்துள்ளார்.

இந்நிலையிலேயே அவர் கடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் (13) கடத்தப்பட்ட பெண்ணின் மகள் தனது தாயை காணவில்லையென பூவரசங்குளம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

அதன்பின்னர் சந்தேக நபர்கள் கடத்தப்பட்ட பெண்ணின் மகளுக்கு தொலைபேசியில் தொடர்புகொண்டு அவரை விடுவிக்க ரூபா 5 இலட்சம் கப்பம் கோரியுள்ளனர். கப்பம் கொடுக்காவிட்டால் குறித்த பெண்ணை சுட்டுக் கொன்றுவிடுவோம் எனவும் சந்தேக நபர்கள் மிரட்டியுள்ளனர். இது தொடர்பில் குறித்த பெண்ணின் மகள் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து கடத்தப்பட்ட பெண்ணின் மகளை அழைத்துக்கொண்டு சந்தேக நபர்களுக்கு தெரியாதவகையில் பொலிஸார் குறித்த இடத்துக்கு சென்றுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து மகளை வரக்கூறிய இடத்தை மாற்றிய சந்தேக நபர்கள் இன்னொரு இடத்தைக் குறிப்பிட்டு அங்கு வருமாறு அறிவித்துள்ளனர்.

அதன்பின்னர் சந்தேகநபர்களால் குறிப்பிடப்பட்ட இடத்துக்கு முறைப்பாடு செய்த யுவதியை அழைத்துக்கொண்டு பொலிஸார் சென்றுள்ளனர்.

பணம் கொடுக்கும் விதத்தில் சந்தேக நபர்கள் அழைக்கப்பட்டு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கப்பம் பெறுவதற்காக கடத்தி சிறை பிடிக்கப்பட்டிருந்த பெண்ணையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் 26 மற்றும் 49 வயதுடைய வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர்கள் வவுனியா நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதுடன், பூவரசன்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை சந்தேக நபர்கள் நால்வரில் மூவரை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பிவைப்பதாக்கூறி தலா ஒரு இலட்சம் வீதம் 03 இலட்சம் ரூபா கடத்தப்பட்ட பெண்ணினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், அந்த பிரதேசத்திலுள்ள மேலும் சிலரிடம் இவ்வாறு பணம் பெற்றுக்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனால், இந்தச் சம்பவங்கள் தொடர்பில் குறித்த பெண் மீது எந்த முறைப்பாடும் இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.



யாழ்ப்பாணம் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயப் பெருவிழா நேற்று முன்தினம் (13) வெகுவிமர்சையாக நடைபெற்றபோது பதுவை புனிதரான அந்தோனியார் தேரில் ஏறி வீதிஉலா வந்து பக்தர்களுக்கு ஆசீர் வழங்கினார். இந்நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அந்தோனியாரை தரிசிக்க வருகை தந்திருந்தனர். (யாழ். நிருபர்)

# உரும்பிராயில் ஆணொருவரின் சடலம் மீட்பு

யாழ். உரும்பிராயிலுள்ள வீடொன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த நபர் அளவுக்கு அதிகமான போதை ஊசி ஏற்றியமையால் உயிரிழந்தாரா? என சந்தேகம் எழுந்திருக்கின்றது.

இணுவில் பகுதியைச் சேர்ந்த தங்கராசா திலீபன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை (12) இரவு இடம்பெற்றிருக்கின்றது.

மேலும், குறித்த நபருடன் மேலும் சிலர் இருந்ததாக கூறியிருக்கும் பொலிஸார் அவர்களையும் கைதுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொசன் போயா தினத்தை முன்னிட்டு

## வவுனியாவில் 6 கைதிகள் விடுதலை




**(வவுனியா நிருபர்)**

பொசன் போயாவை முன்னிட்டு வவுனியா சிறைச்சாலையிலிருந்து 6 பேர் நேற்று (14) விடுவிக்கப்பட்டனர்.

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ஷவின் பரிந்துரையின்பேரில் 173 கைதிகள் நாடுபூராகவும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அதனடிப்படையில், சிறு குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் அபராதம் செலுத்தாது சிறைத்தண்டனை பெற்றுவந்த கைதிகள் 6 பேர் வவுனியா சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

வவுனியா சிறைச்சாலை அத்தியட்சகர் ந.பிரபாகரன், சிறைச்சாலை உதவி அத்தியட்சகர் சந்திரசிறி மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் இணைந்து குறித்த 6 பேரையும் விடுவித்ததுடன், எதிர்காலத்தில் குற்றங்கள் செய்யாது சமூகத்தில் நற்பிரஜைகளாக வாழ வேண்டும் எனவும் ஆலோசனைகளை வழங்கியிருந்தனர்.

## யாழில் 7 கைதிகள் விடுதலை




**(யாழ். நிருபர்)**

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ஏழு கைதிகள் யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

சிறுகுற்றங்களை புரிந்தவர்கள் மற்றும் தண்டப்பணம் செலுத்தத் தவறியவர்களே இவ்வாறு சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

நாடுமுழுவதும் 173 கைதிகளுக்கு நேற்று பொது மன்னிப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்திருந்த நிலையில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஏழு கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் இராசதானியத் திட்டம் சங்கானையில்



தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் இராசதானியத் திட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு (12) சங்கானையில் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் சிறுதானியங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் சிறுதானியங்களை மீள முடிசூட்டுவோம் எனும் கருப்பொருளில் இராசதானியம் என்ற திட்டத்தை விவசாயக் கிராமங்களில் முன்னெடுத்து வருகிறது. இதன் தொடர்ச்சியாகவே இத்திட்டத்துக்கான விதைகள் வழங்கும் நிகழ்ச்சி சங்கானை மடத்தடியில் இடம்பெற்றுள்ளது.

மடத்தடி வரசித்தி விநாயகர் ஆலய முன்றலில் தி. சத்தியேந்திராவின் தலைமையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழ்த் தேசியப்பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், பொருளாளர் க. கேதீஸ்வரநாதன் ஆகியோர் இராசதானியத் திட்டம் தொடர்பான கருத்துரைகளை வழங்கியிருந்தார்கள்.

ஓய்வுநிலைப் பிரதி விவசாயப் பணிப்பாளர் பொ. அற்புதச்சந்திரன் சிறுதானியங்களின் செய்கைமுறை பற்றிய வழிகாட்டுதல்களை வழங்கியிருந்தார்.

இதன்போது ஐம்பது விவசாயிகளுக்குக் குரக்கன், காராமணி (கௌபி), பயறு விதைகள் வழங்கப்பட்டன. இலவசமாக வழங்கப்பட்ட விதைகளின் இரட்டிப்பு மடங்கு விதைகள் சுழற்சி முறையில் ஏனைய விவசாயிகளுக்கு வழங்கும்பொருட்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்திடம் கையளிக்க வேண்டும் என்ற புரிந்துணர்வின் அடிப்படையிலேயே இவ்விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

நாடு எதிர்நோக்கியுள்ள உணவுப் பஞ்சத்துக்கு முகங்கொடுக்கும் விதமாக அதிக நீரும், அதிக உரங்களும் தேவைப்படாத குறுகியகாலப் பயிர்களான சிறுதானியங்கள் மற்றும் அவரையினப் பயிர்களை உற்பத்திசெய்வதில் விவசாயிகள் தற்போது ஆர்வங்காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியாவில் லாவ்ஸ் எரிவாயு விநியோகம்



**(செ.திவாகரன்)**

நாடு பூராகவும் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் லாவ்ஸ் எரிவாயு சிலிண்டர்கள் பொலிஸாரின் பாதுகாப்பிற்கு மத்தியில் நுவரெலியா மக்களுக்கு நேற்று (14) வழங்கப்பட்டது.

எனினும், அனைத்து வாடிக்கையாளர்களினதும் தேவைக்கேற்ப சமையல் எரிவாயுவைபெற்றுக் கொள்ள முடியவில்லை.

இதன்போது நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் தொழில் புரிவோருக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்டமையால் சமையல் எரிவாயுவை கொள்வனவு செய்ய காத்திருந்த பொதுமக்கள் சிலருக்கு அது கிடைக்காமையால் அங்கு அமைதியின்மை ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த சிலமாதங்களுக்கு மேலாக லாவ்ஸ் எரிவாயு வழங்கப்படாதிருந்த நிலையில் தற்போது சந்தையில் லாவ்ஸ் எரிவாயுவை பெற்றுக் கொள்ளக்கூடியதாகவுள்ளது.

பொதுமக்கள் அதனைப் பெற்றுக்கொள்வதற்காக அதிகாலை 4 மணியிலிருந்து நீண்ட வரிசையில் நுவரெலியா மின்சாரசபை கட்டிடத்துக்கு முன்பாக காத்திருந்து பெற்றுச் சென்றதை அவதானிக்க முடிந்தது. சுமார் ஆயிரத்து 150 எரிவாயு சிலிண்டர்கள் கடும் நெருக்கடிக்கு மத்தியில் நுவரெலியா, பொரலாந்த, கந்தப்பளை, மாகஸ்தோட்டம், நானுஓயா உள்ளிட்ட பல பகுதிகளிலிருந்து வருகைதந்த பொதுமக்களுக்கு பொலிஸாரின் மேற்பார்வையில் வழங்கப்பட்டது.

# தனியார் பஸ்ஸில் டீசல் திருடிய மூவர் ஹட்டன் பொலிஸாரால் கைது

**(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)**

ஹட்டன் பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்பட் டிருந்த தனியார் பஸ்ஸில் டீசல் திருடியதாக சந்தேகத்தின் பேரில் மூவர் ஹட்டன் பொலிஸாரால் நேற்று(14) கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹட்டன் - எபேட்ஸிலி வீதியில் செல்லும் தனியார் பஸ்ஸிலேயே இவ்வாறு டீசல் களவாடப்பட்டுள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

குறித்த பஸ் உரிமையாளர் நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்து தனது பஸ் வண்டிக்கு சுமார் 140 லீற்றர் டீசல் நேற்றுமுன்தினம் நிரப்பி வந்து நிறுத்திவைத்திருந்துள்ளார். இதன்போது, இரவுவேளையில் குறித்த பஸ்ஸிலிருந்த இனந்தெரியாத சிலர் டீசல் தாங்கியிலிருந்து சுமார் 120 லீற்றர் வரையிலான டீசலை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு 120 லீற்றர் டீசலை களவாடியவர்கள் 100 லீற்றர் வரையிலான டீசலை பாவனைக்கு எடுத்து விட்டு மிகுதி 20 லீற்றரை வீடொன்றில் மறைத்து வைத்திருந்த நிலையில் பொலிஸாரால் அதுவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் எபோட்ஸிலி வீதியில் செல்லும் தனியார் பஸ் உரிமையாளர் உட்பட பிரதேச இளைஞர்கள் இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன.

# புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பம் கோரல்



**(தலவாக்கலை நிருபர்)**

ஆசிரியர் விடுதலை முன்னணி கடந்த காலங்களில் தமது அங்கத்தவர்களின் பிள்ளைகளின் நலன் கருதி புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருடா வருடம் அதனை நடத்தி வருகின்றது. அதேபோன்று இவ்வருடமும் இந்நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அந்தவகையில் 2019, 2020, 2021 ஆகிய வருடங்களில் தரம் ஐந்து புலமைப்பரிசில் மற்றும் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் முன்னணியின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கே இவ்வாறு புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

அதேவேளை 1988ஆம், 1990ஆம் ஆண்டுகளில் நியமனம் பெற்ற அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் ஆகியோரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. எனவே அதற்கான விண்ணப்பங்களை தகுதியானவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளது.

இவ்விண்ணப்பங்களை செயலாளர் நாயகம், ஆசிரியர் விடுதலை முன்னணி, த.பெ.இலக்கம் - 10, நுவரெலியா எனும் முகவரிக்கு 10.07.2022ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்புமாறும் விண்ணப்ப உறையின் மேல் இடது மூலையில் புலமைப்பரிசில் திட்டம், கௌரவிப்பு போன்றவற்றுக்கு விண்ணப்பிப்பவர்கள் உரியதை குறிப்பிடப்பட வேண்டும் எனவும் ஆசிரியர் விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் என்.டி.எஸ்.நாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

# சிங்கராஜா வனப்பகுதிக்கு ஏலம், கிராம்பு பறிக்கச்சென்ற தாயொருவரை காணவில்லை



(பலாங்கொடை நிருபர்)

இறக்குவானை சூரியகந்தை தோட்டத்தைச் சேர்ந்த 49 வயதான தாயொருவரை கடந்த 03ஆம் திகதி முதல் காணவில்லையென சூரியகந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சூரியகந்தை பகுதியினூடாக சிங்கராஜா வனப்பகுதிக்கு ஏலம் மற்றும் கிராம்பு பறிக்க மனோரஞ்சனி எனும் குறித்த தாய், தனது கணவனையும் மகனையும் அழைத்துக் கொண்டு சென்றபோதே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக அம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு குறித்த மூவரும் வனப்பகுதியில் வெவ்வேறு இடங்களில் ஏலம், கிராம்பு பறித்துக் கொண்டிருந்துள்ளனர். சிறிது நேரத்திற்கு பின் தனது தாயை மகன் அழைத்துள்ளார்.

அவ்வேளையில், மகனின் அழைப்புக்கு தாய் தான் இருந்த இடத்திலிருந்து குரல் கொடுத்திருந்தார். எனினும், சிறிது நேரத்தின் பின் குறித்த தாயை தேடியும் அவரை காணவில்லை என அம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, சூரியகந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு, குருவிட்ட இராணுவ வீரர்களுடன் தோட்ட இளைஞர்களும் இணைந்து மூன்று நாட்களாக தேடியும் குறித்த தாய் கண்டுபிடிக்கப்படவில்லை.

நேற்றுடன் 11 நாட்களை கடந்துள்ள போதிலும், இதுவரையிலும் குறித்த பெண் பற்றிய தடயங்கள் எதுவும் கிடைக்கவில்லையெனஅவரது உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.



பொசன் பௌர்ணமி தினத்தையொட்டி மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் நேற்று(14) பாணும் சீனி சம்பலும் தானம் வழங்கப்பட்டது. இதன்போது வைத்தியர்கள், தாதியர்கள், மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி யசரத்ன பண்டார, அதிரடிப் படையினர், நகரவாழ் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (செ.தி.பெருமாள்)



கொட்டகலை வீ ஆசிரியர் ஒன்றியத்தினால் ஹட்டன் புகைப்பட சங்கத்தின் நிதி அனுசரணையில் ஹட்டன் சேகரனின் ஏற்பாட்டில் தலவாக்கலை டெரிக்கிளையார் பாடசாலை மாணவர்கள் 100 பேருக்கு தலா 1000 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. தலவாக்கலை டெரிக்கிளையார் பாடசாலை பிரதான மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் அலெக்சாண்டர், ஹட்டன் சேகரன் மற்றும் வீ ஆசிரியர் ஒன்றியத்தின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர். (தலவாக்கலை நிருபர்)

# உத்தரப்பிரதேசத்தில் புல்டோசருக்கு இரையாகும் இஸ்லாமியரின் வீடுகள்

## உயர்நீதிமன்றத்தை நாடியது இஸ்லாமிய அமைப்பு







உத்தரப்பிரதேசத்தில் சட்டவிரோதமாக வீடுகளை இடிப்பதை தடுத்துநிறுத்துமாறு உயர்நீதிமன்றத்தில் ஜம்இய்யத் உலமா-இ-ஹிந்த் என்ற அமைப்பு வழக்கு தொடர்ந்துள்ளது.

சர்ச்சைக்குரிய பேச்சுகளால் புகழ்பெற்ற பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் நுபுர் சர்மா, அண்மையில் தொலைக்காட்சி ஒன்றில் நடைபெற்ற விவாத நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

அப்போது பேசிய நுபுர் ஷர்மா இறைத்துதரான நபிகள் நாயகம் குறித்து அவதூறாக பேசினார். அதேபோல் அக்கட்சியின் நவீன் குமார் ஜிண்டாலும் முஹம்மது நபி குறித்து ட்விட்டரில் அவதூறாக கருத்திட்டார்.

நுபுர் ஷர்மாவின் இந்த கருத்து நாடு முழுவதும் பெரும் சர்ச்சைக்குள்ளானது. மும்பையில் நுபுர் ஷர்மா மீது 2 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இது தொடர்பாக அவருக்கு அழைப்பாணை அனுப்பி மும்பை பொலிஸ் விசாரணை நடத்தவுள்ளது. இதேபோல் டில்லி பொலிஸும் நுபுர் சர்மா மீது வழக்குப் பதிவுசெய்துள்ளது.

**வெளிநாடுகள் எதிர்ப்பு**

இந்நிலையில், நுபுர் ஷர்மாவின் சர்ச்சைக்குரிய பேச்சு அரபு நாடுகளிலும் சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி கொந்தளிப்பை ஏற்படுத்தியது. சவூதி அரேபியா, ஈரான், குவைத், கட்டார், ஓமான் உள்ளிட்ட 15இற்கும் மேற்பட்ட இஸ்லாமிய நாடுகள், இஸ்லாமிய ஒத்துழைப்பு கூட்டமைப்பு ஆகியன இந்தியாவில் நடக்கும் இஸ்லாமியர்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்தும், பா.ஜ.க. பிரமுகரின் பேச்சுக்கும் கடும் கண்டனங்களை தெரிவித்திருந்தன. அரபு நாட்டு மக்கள் ட்விட்டரில் #Boycott India என்ற ஹேஷ்டேக்கை ட்ரெண்ட் செய்துவந்தமை குறிப்பிடத்தக்கது.

**கான்பூர் கலவரம்**

உத்தரப்பிரதேச மாநிலம் கான்பூரில் கடந்த வாரம் நுபுர் ஷர்மாவின் பேச்சை கண்டித்து நடைபெற்ற போராட்டத்தில் கலவரம் வெடித்தது. இதில் பலர் படுகாயமடைந்துள்ளனர். பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் மீது வழக்குப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. கலவரத்தில் ஈடுபட்டவர்களின் வீடுகள் புல்டோசரில் இடிக்கப்படும் என பொலிஸார் எச்சரித்திருந்தனர்.

நபிகள் நாயகம் குறித்து அவதூறாக பேசிய நுபுர் ஷர்மா இன்னும் கைது செய்யப்படாத நிலையில், இந்தியா முழுவதும் அவரை கைதுசெய்ய வலியுறுத்தி இஸ்லாமியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். உத்தரப்பிரதேசத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் போராட்டங்கள் வெடித்தன. சில இடங்களில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தியதால் பதற்றம் ஏற்பட்டது.

இந்நிலையில், முதலமைச்சர் யோகி ஆதித்யநாத்தின் ஊடக ஆலோசகர் ரிதியுங்ஜய் குமார் தனது ட்விட்டர் பக்கத்தில்,

''புல்டோசரைகொண்டு வீடுகளை இடிக்கும் படத்தைப் பகிர்ந்து, ஒவ்வொரு வெள்ளிக்கிழமைக்கும் அடுத்தநாள் சனிக்கிழமை வரும் என எச்சரித்திருந்தார். இந்நிலையில், சஹாரன்பூரில் போராட்டத்தில் இஸ்லாமியர்களை கைதுசெய்த பொலிஸார், அங்குள்ள வீடுகளை புல்டோசரைகொண்டு இடித்தனர்.

அதேபோல் டில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர் சங்கப் பிரதிநிதியும், மாணவர் செயற்பாட்டாளருமான ஆஃப்ரின் பாத்திமாவின் வீட்டையும் உத்தரப்பிரதேச அரசு இடித்துத் தள்ளியது. இந்நிலையில், உத்தரப்பிரதேசத்தில் சட்டவிரோதமாக வீடுகளை இடிப்பதை தடுத்துநிறுத்துமாறு உயர்நீதிமன்றத்தில் ஜம்மியத் உலமா-இ-ஹிந்த் என்ற அமைப்பு வழக்கு தொடர்ந்துள்ளது.

## விவேக் நினைவாக 'பீ ஹெப்பி' வனம்



மறைந்த நகைச்சுவை நடிகர் விவேக் நினைவாக, 'பீ ஹெப்பி' என்ற பெயரில் வன பூங்கா கோவையில் அமைக்கப்படவுள்ளது. மறைந்த பிரபல பின்னணிப் பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் நினைவாக கோவை பச்சாபாளையத்தில் சிறுதுளி அமைப்பு சார்பில், 'எஸ்.பி.பி. வனம்' உருவாக்கப்பட்டது. இந்த வனத்தை ஏற்கனவே நடிகர் விவேக் ஆரம்பித்து வைத்தார்.

இந்நிலையில், விவேக் மரணமடைந்ததை தொடர்ந்து அவரது நினைவாக 'பீ ஹேப்பி' என்ற பெயரில் ஒரு ஏக்கரில் மேலும் ஒரு வனப்பூங்காவை அமைக்க சிறுதுளி அமைப்பு திட்டமிட்டுள்ளது.

நடிகர் விவேக் பேசிய சினிமா வசனங்களில், 'பீ ஹெப்பி' என்ற வார்த்தை மிகவும் பிரபலம். இதை வைத்து மீம்ஸ்களும் அவ்வப்போது வெளிவரும். அந்த வார்த்தையை மையப்படுத்தியே வனம் அமையவுள்ளது.



தாயின் முதுகில் ஒய்யாரமாக சவாரிசெல்லும் குட்டிக் கரடிகள்.... (கோத்தகிரி)

### நபிகள் நாயகம் குறித்த சர்ச்சை கருத்து:

## போராட்டம் நடத்திய இந்தியர்கள் உட்பட வெளிநாட்டினரை வெளியேற்றுகிறது குவைத்




நபிகள் நாயகம் குறித்த சர்ச்சை கருத்துக்கு எதிரான போராட்டத்தில் பங்கேற்ற வெளிநாட்டவர்களை குவைத் அரசு, தங்கள் நாட்டிலிருந்து வெளியேற்றவுள்ளது.

நபிகள் நாயகம் குறித்து பா.ஜ.கவின் முன்னாள் செய்தித் தொடர்பாளர்கள் நுபுர் சர்மா, நவீன் ஜிண்டால் ஆகியோரின் கருத்துக்கு இந்தியாவில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. இதையடுத்து பா.ஜ.க. உறுப்பினர்கள் இருவரும் கட்சி நடவடிக்கைக்குள்ளாகியுள்ளதுடன், கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். மேலும் இருவர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பா.ஜ.க. முன்னாள் நிர்வாகிகளின் கருத்துக்கு சவூதி அரேபியா, குவைத், கட்டார், ஈரான், ஈராக் உள்ளிட்ட 15 இஸ்லாமிய நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்ததுடன், தங்கள் நாடுகளிலுள்ள இந்தியத் தூதர்களை நேரடியாக அழைத்தும் கவலை தெரிவித்தன.

நபிகள் நாயகம் குறித்த சர்ச்சை கருத்து விவகாரத்தில் குவைத்திலுள்ள ஃபஹாஹீல் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை தொழுகைக்குப் பிறகு போராட்டம் நடைபெற்றது.



குவைத்திலுள்ள வெளிநாட்டவர்கள் போராட்டத்தில் பங்கேற்கக்கூடாது என குவைத் அரசு அறிவுறுத்தியிருந்த நிலையில், அதையும் மீறி பலர் போராட்டத்தில் பங்கேற்றனர். இவர்களை நாட்டிலிருந்து வெளியேற்ற குவைத் அரசு முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து 'தி அராப் ரைம்ஸ்' நாளிதழில் வெளியான செய்தியில்,

"குவைத்தில் வெளிநாட்டவர்கள் தர்ணா அல்லது ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க /ஏற்பாடு செய்யக்கூடாது என விதிமுறைகள் இருக்கும் நிலையில், இவர்கள் அதை மீறியதால் குவைத்திலிருந்து வெளியேற்றப்படவுள்ளனர். இவர்களை சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்புவதற்காக அவர்களை கைது செய்யும் நடவடிக்கையில் குவைத் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். வெளியேற்றப்படும் அனைவரும் மீண்டும் குவைத் வருவதற்கு தடை விதிக்கப்படும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், நாடு கடத்தப்படவுள்ளவர்கள் எந்தெந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்ற தகவல் அந்தச் செய்தியில் குறிப்பிடப்படவில்லை.

குவைத்தில் அதிகளவில் தங்கியுள்ள வெளிநாட்டவர்களில் இந்தியர்கள் முதலிடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அணு ஆயுத தயாரிப்பில் தீவிரம் காட்டும் இந்தியா



இந்தியாவிடம் 160 அணு ஆயுதங்கள் கையிருப்பில் இருப்பதாகவும், அணு ஆயுத தயாரிப்பில் தீவிரம் காட்டி வருவதாகவும் ஆய்வு அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

சுவீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமைச் சேர்ந்த சிப்ரி எனப்படும் ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆய்வு மையம், இராணுவம் தொடர்பான ஆய்வுகளை நடத்திவருகிறது. இந்த அமைப்பு வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அமெரிக்கா, ரஷ்யா, பிரித்தானியா, பிரான்ஸ், சீனா, இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல் மற்றும் வடகொரியா ஆகிய ஒன்பது நாடுகளிடம் மட்டுமே அணு ஆயுதங்கள் உள்ளன.

கடந்த 2021 ஜனவரியில் இந்தியாவிடம் 156 அணு ஆயுதங்கள் இருந்தன. இது, 2022 ஜனவரியில் 160 ஆக உயர்ந்துள்ளது. அதே நேரத்தில் சீனாவிடம் 350 அணு ஆயுதங்களும், பாகிஸ்தானிடம் 165 ஆயுதங்களும் உள்ளன. ஓராண்டில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. அணு ஆயுதங்கள் கையிருப்பு தொடர்பாக நாடுகள் முழுமையான தகவல்களை பரிமாறிக்கொள்வதில்லை.

ஏவுகணை சோதனைகள் தொடர்பான தகவல்களை மட்டுமே இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் தெரிவிக்கின்றன. அதே நேரத்தில் நம்பத்தகுந்த உளவு தகவல்கள் அடிப்படையில், நாடுகளிடம் உள்ள அணு ஆயுதங்கள் குறித்த தகவல்கள் திரட்டப்படுகின்றன.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய செய்திகள்


திகதி 13.06.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4785
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,185,760.00
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 3 0 3 8 2 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 19,935,857.40

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1263
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,632,180.00
வெற்றி இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 7 7 5 3 4 9
அடுத்த சீட்டிழுப்பின சுப்பர் பரிசு ரூ. 11,814,540.80

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3027
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,976,980.00
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 42 57 59 64
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,277,371.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 815
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,253,880.00
X 02 09 40 72
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 114,413,661.60

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0094
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,894,240.00
இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 21 34 40 48 விசேட இலக்கினம் விருச்சிகம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,507,547.00

கோடி 25+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1133
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,014,700.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 256,340,382.00
S 09 02 12 20 52
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011-4607001-2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk


## அளுத்கமை - தர்ஹா நகர் கலவரத்தின் ஒரு துளி...

*(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

**களுத்துறை பள்ளிவாசலில் ஜனாஸாக்கள்**

அடுத்து ஒரு புதுத் தகவல். ஜனாஸாக்கள் பற்றிய தகவல்.

அந்தக் கலவரத்தில் கொல்லப்பட்டவர்களின் ஜனாஸாக்கள்.

ஆம்...

களுத்துறை பள்ளிவாசலுக்கு கொண்டுவரப்பட வுள்ளன அவை. தொழுகைக்காக...

நாங்கள் எல்லோரும் இப்போது அந்தப் பள்ளிவாசலில்...

பிற்பகல் 2.30 மணி இருக்கும்.

சிறிய லொறி ஒன்றில் அந்த ஜனாஸாக்கள். கொண்டு வரப்படுகின்றன அங்கு.

நிறைகிறார்கள் மக்கள்.

இப்போது இறக்கப்படுகின்றன ஜனாஸாக்கள்.

**ஜனாஸா வாகனம் மீது தாக்குதல்**

குளிப்பாட்டி-கபனிட்டு-தொழுவித்து விடைபெறுகின்றன அந்த ஜனாஸாக்கள். நல்லடக்கத்துக்காக..

தர்ஹா நகரை நோக்கி...

10 முஸ்லிம்கள்-20 பொலிஸார் 30 பேர்தான் ஜனாஸாக்களுடன்.

ஜனாஸா வாகனம் நடுவில். அதற்கு முன்னால் ஒரு ஜீப். பின்னால் ஒரு ஜீப் பாதுகாப்புக்காக...

இடைமறிக்கிறார்கள் இனவாதிகள். கந்தவிஹார வீதியில் வைத்து...

எட்டிப் பார்க்கிறார்கள் உள்ளே.ஜனாஸாக்கள் அதற்குள்...

ஓ ...சாமான் போகுதுபோல...திரும்பி இதாலதானே வரணும். வரும்போது பார்ப்போம்..

கூறி அனுப்புகிறார்கள். எதுவும் செய்யவில்லை.

விளங்கிவிட்டது இவர்களுக்கு. திரும்பி வரும்போது தாக்கப்போகிறார்கள் என்று...

மாற்று வழியை நாடவேண்டும். அப்படியே செய்கிறார்கள். ஜனாஸாக்களை அடக்கிவிட்டு...

அந்த மாற்று வழியிலும் இனவாதிகள்...

தயாராகிறார்கள் தாக்குவதற்கு... வாகனங்களைக் கண்டதும்...

நடப்பது நடக்கட்டும். வாகனங்களை நிறுத்துவதில்லை. அவர்களை முட்டி மோதியாவது வர வேண்டும்.

வருகிறார்கள் வேகமாக..

முன்னோக்கிப் பாய்கிறார்கள் இனவாதிகள்.

சூழ்ந்துவிட்டார்கள் வாகனத்தை. தாக்குகிறார்கள் வளைத்து நின்று. கண்ணாடிகளை உடைத்து...

இருந்தும், நிறுத்தவில்லை வாகனத்தை... பாய்கிறது கூட்டத்தைக் கிழித்துக்கொண்டு...

கண்ணாடிகளை உடைத்து... அவ்வழியாக நுழைகிறார்கள் கத்திகளை... வாள்களை.

ஓரத்தில் இருந்தவர்களின் தலைகளில் காயம். கத்திகள் பட்டு...

கடும் முயற்சி. வாகனத்தில் உள்ளவர்களை இழுத்துப்போட்டு வெட்டுவதற்கு. அது முடியவில்லை.

அவ்வாறு தாக்கிய அந்தக் கூட்டத்தில் அதிகமாக இருந்தவர்கள் யார் தெரியுமா? சிங்களப் பெண்கள்.

அவர்கள்தான் ஆக்ரோஷமாகத் தாக்குகிறார்கள். பாய்ந்து பாய்ந்து. கெட்ட கெட்ட வார்த்தைகளால் திட்டிக்கொண்டு...

பெண்களே களத்தில் இறங்கித் தாக்கும் அளவுக்கு அவர்களின் மனங்களை மாற்றி இருந்தது பொதுபலசேனா.

கடும் போராட்டம். நீண்ட நேரப் போராட்டம்.

ஒருவாறு தப்புகிறார்கள் அங்கிருந்து... பலருக்குக் காயம்.

**பேரினவாதிகளின் வீடுகளுக்கு முன்பாக பெற்றோல் - மண்ணெண்ணெய் போத்தல்கள்**

அது மட்டுமா...?

வரும் வழியில் இன்னும் சில காட்சிகள்.

இனவாதிகளின் ஒவ்வொரு வீடுகளுக்கு முன்பாகவும் பெற்றோல் போத்தல்கள் - மண்ணெண்ணெய் போத்தல்கள் - கலன்கள்.

எல்லாமே வெற்று போத்தல்கள்.

முஸ்லிம்களின் சொத்துகளை எரிப்பதற்குப் பாவித்தவை அவை.

அளுத்கமை...தர்ஹா நகர் கலவரத்தின் ஒரு துளிதான் இது. இன்னும் எத்தனையோ சம்பவங்கள். இதுபோல்... சந்திப்போம்...கலவரத்தின் மற்றுமொரு சம்பவத்தோடு...

**[ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக்]**

# இளைஞர்களின் போதைப்பொருள் கூடாரமாக மாறியுள்ள மீலாத் நகர் சனசமூக நிலைய கட்டடம் - சிறுவர் பூங்கா

## இதனை புனரமைத்து மக்கள் பாவனைக்கு வழங்க கோரிக்கை



(அட்டாளைச்சேனை நிருபர்)

அட்டாளைச்சேனை மீலாத் நகரில் அல்-ஜெஸீறா வித்தியாலயத்திற்கு முன்னால் அமைந்துள்ள சனசமூக நிலையக் கட்டடம் மற்றும் சிறுவர் பூங்கா நீண்டகாலமாக சேதமடைந்த நிலையில், புற்புதர்களுடன் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. இதனைப் புனரமைத்து மக்களின் பயன்பாட்டுக்கு வழங்குமாறு இப்பிரதேச மக்கள் விசனத்துடன் கோரிக்கை விடுகின்றனர்.

அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குச் சொந்தமான இந்த அரச கட்டடம் மற்றும் சிறுவர் பூங்கா ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபின் சிந்தனைக்கமைவாக அட்டாளைச்சேனையில் நடைபெற்ற தேசிய மீலாத் விழாவின்போது இக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு, 1997.07.18ஆம் திகதி திறந்து மக்களின் பாவனைக்காக ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இக்கட்டடத்தின் கதவுகள், ஜன்னல்கள் உடைக்கப்பட்டும் தற்போது இல்லாமலும், கூரை உடைந்த நிலையிலும் புற்புதர்களுடன் கவனிப்பாரற்று காட்சியளிப்பதுடன், அரச சொத்து வீண் விரயமாகிறது. இங்கு இரவு வேளையில் கால்நடைகள் தங்கும் இடமாகவும் இன்றைய இளைஞர்கள் மதுபானம் உட்பட போதைப்பொருட்கள் பாவிக்கும் இடமாகவும் காணப்படுகின்றது. முல்லைத்தீவு மீலாத் நகர் பிரதேசத்தில் அடிக்கடி களவுகள் நடைபெறுகின்றன.

அல் - ஜெஸீறா வித்தியாலயத்திற்கு முன்னால் அமைந்துள்ள சனசமூக நிலையக் கட்டடம் மற்றும் சிறுவர் பூங்காவை புனரமைத்து மக்களின் பயன்பாட்டுக்கு விரைவில் வழங்குமாறு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளினது கவனத்திற்கு இப்பிரதேச ஏழை மக்கள் இக்கோரிக்கையினை முன்வைக்கின்றனர்.

# மட்டு. மாவட்டத்தில் யானை - மனித மோதலில் 76 யானைகள் பலி



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் யானைகளுக்கும் மனிதர்களுக்குமிடையிலான மோதல்கள் தொடர்ந்தவண்ணமே உள்ளன.

கடந்த ஆறு ஆண்டுகளில் இம்மாவட்டத்தில் 76 யானைகள் இறந்துள்ளதுடன், 149 யானைகள் காயமடைந்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட காணி விவகாரங்களுக்குப் பொறுப்பான மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நவரூபரஞ்சனி தெரிவித்தார்.

இக்காலப்பகுதியில் காட்டு யானைகள் 660 சொத்துகளுக்கும் சேதத்தை உண்டு பண்ணியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

செங்கலடி பிரதேச செயலகப் பிரிவிற்குட்ட உன்னிச்சை 10ஆம் கட்டை கிராமம் குறித்த கிராமத்தில் நீண்டகாலமாக இயங்கிவந்த கோழிப்பண்ணை காட்டு யானைத் தாக்குதலினால் முற்றாக சேதமடைந்து குறித்த பண்ணையையே இழுத்து மூடிவிட்டனர்.

குறித்த கிராமத்தில் யானைகளின் அட்டகாசம் தொடர்பாக அகில இலங்கை விவசாயிகள் சம்மேளன மட்டக்களப்பு மாவட்ட தலைவர் கே.யோகவேல் கருத்து வெளியிட்டார்.

# பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு மட்டு. சிறையிலிருந்து 4 கைதிகள் விடுதலை

(மட்டக்களப்பு நிருபர்)



பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் நேற்று (14) இலங்கையில் உள்ள சிறைகளிலிருந்து 173 சிறைக்கைதிகளை விடுவிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஏலவே தெரிவித்திருந்தார்.

இதன்படி, தண்டனை இரத்து ஊடாக 141 கைதிகளையும், 14 நாட்கள் தண்டனைக் காலம் குறைப்பின் ஊடாக 32 கைதிகளையும் விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கமைவாக மட்டக்களப்பு சிறைச்சாலையிலும் சிறைவாசம் அனுபவித்து வந்த 4 கைதிகள் நேற்று (14) காலை மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.எல்.விஜயசேகரவின் வழிகாட்டலில் பிரதம ஜெயிலர் ஆர்.மோகன்ராஜ் முன்னிலையில் விடுதலை செய்யப்பட்டனர். விடுதலையான நால்வரும் ஆண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிறு குற்றம் புரிந்த தண்டனைப் பணம் செலுத்தாத கைதிகளே நேற்று விடுதலை செய்யப்பட்ட கைதிகளாவர்.

# வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்கான தொழில் சந்தை

(கிண்ணியா நிருபர்)

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் தம்பலகாமம் பிரதேச செயலகம் இணைந்து நாளை (16) காலை 9.00 - 3.30 வெளிநாட்டு பணியகத்தின் திருகோணமலை கிளையில் (4ஆம் கட்டை, கச்சேரிக்கு அருகில்) வெளிநாட்டு தொழிற்சந்தை (job marketing) ஒன்றை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் இந்நிகழ்வில் 10இற்கும் மேற்பட்ட முகவர் நிறுவனங்கள் (Agency), பணியக உயர் அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளதால் வெளிநாட்டு வேலைவாய்ப்பொன்றை எதிர்பார்த்துள்ளோர் தங்களின் தகுதிக்கேற்ப தொழில்வாய்ப்பைப் பெற இவ்வரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதாக தம்பலகாமம் பிரதேச செயலக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரிவு தெரிவிக்கிறது.

மேலதிக தகவல்களுக்கு
B.M Dilsath Fedo - 0763060737
J.Krishanthini Fedo - 0760103921
எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கிண்ணியாவில் இலவச மூக்குக்கண்ணாடி வழங்கிவைப்பு



(கிண்ணியா நிருபர்)

பார்வை குறைபாடு உடையவர்களுக்கான இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு நேற்று (14) காலை 9.45 மணிக்கு கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் இடம்பெற்றது.

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வாழும் மக்களின் பார்வை குறைபாடு உடையவர்களை தெரிவுசெய்து அவர்களுக்கான மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வே நேற்று இடம்பெற்றது.

இதில் சுமார் 161 நபர்கள் மூக்குக்கண்ணாடிகளை பெற்றுக்கொண்டனர்.

இவர்களுக்கான கண் பரிசோதனை செய்யும் நிகழ்வு கடந்த மாதம் 2022.05.29ஆம் திகதி கிண்ணியா பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. இவ்வாறு கண் பரிசோதனை செய்யப்பட்டவர்களுக்கே நேற்று மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன

இக்கண்ணாடி வழங்கும் நிகழ்வை தேசிய விடுதலை மக்கள் முன்னணி கட்சியின் தலைவர் முஸம்மில் முகைதீன் ஏற்பாடு செய்திருந்தார்.

# கிண்ணியாவில் தேசிய மக்கள் சக்தியின் நெருக்கடிக்குத் தீர்வு மக்கள் சந்திப்பு



(பொலிவேரியன் நிருபர்)



நெருக்கடிக்கு தீர்வு எனும் கருப்பொருளில் தேசிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த நிகழ்வு கிண்ணியா நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட செயற்குழு உறுப்பினர்களான எம்.இ.எம்.ராபிக் ஆசிரியர் மற்றும் ஏ.எச்.எம்.பஷீர் ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், தேசிய மக்கள் சக்தியின் செயற்குழு உறுப்பினரான அருண் ஹேமச்சந்திர, தேசிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட செயற்குழு உறுப்பினரும் சமூக நீதிக் கட்சியின் தலைவரும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிவுரையாளருமான நஜா முகம்மத், தேசிய மக்கள் சக்தியின் தேசிய செயற்குழு உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான லால்காந்த ஆகியோர் கலந்துகொண்டு சமகால நெருக்கடிக்கான தீர்வை முன்வைத்து உரையாற்றினர்.

அதேநேரம் நிகழ்வில் கலந்துகொண்ட மக்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில்கள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# இராணுவத்தினரால் காரைதீவில் பொசன் பண்டிகை; மக்களுக்கு மரவள்ளிக்கிழங்கு துவையல் தானம்!





(மாளிகைக்காடு நிருபர்)

இராணுவத்தின் அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி பிரிகேடியர் சந்திரா அபேகோனின் அறிவுறுத்தலுக்கமைய விஜயபாகு காலாட்படை படைப் பிரிவு கட்டளைத் தளபதி லெப்டினன்ட் கேர்ணல் தர்ஷன சிறிசேனவின் ஒழுங்கமைப்பில் காரைதீவு பிரதேசத்தில் நேற்று (14) பொசன் பண்டிகை வெகுசிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

இதன் முக்கிய அம்சமாக காரைதீவு முகாம் பொறுப்பதிகாரி மேஜர் சமில் நிசான், நிந்தவூர் முகாம் பொறுப்பதிகாரி கப்டன் கசுன் சில்வா ஆகியோரின் பகீரத முயற்சியில் இம்மாவட்டத்தைச் சேர்ந்த பொதுநல செயற்பாட்டாளர்களின் பங்களிப்பில் பல நூற்றுக்கணக்கான பொதுமக்களுக்கு மரவள்ளி கிழங்கு துவையல் தானம் வழங்கப்பட்டது. முகாமை அண்டிய பிரதான வீதி ஓரமாக பந்தல் அமைத்து வீதியால் வந்தவர்கள், சென்றவர்கள் ஆகியோரை அழைத்து தாமரை இலையில் மரவள்ளி கிழங்கு துவையலை பரிமாறினார்கள்.

இவ்வைபவத்தில் கல்முனை ஸ்ரீ சுபத்திராராம விகாராதிபதி ரன்முத்துக்கல சங்கரரட்ண தேரர், நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.எம்.தாஹீர் ஆகியோருடன் பங்களிப்புகள் வழங்கிய பொதுநல செயற்பாட்டாளர்களும் பேராளர்களாக கலந்து கொண்டனர்.

நிந்தவூர் பிரதேச சபைக்கு வருகை தர வேண்டும் என்று தேரருக்கு தவிசாளர் தாஹீர் வைபவத்தில் வைத்து அழைப்பு விடுத்தார். அத்துடன், சமயங்களால் வேறுபட்டு இருந்தாலும்கூட ஒவ்வொரு இனத்தவரின் பண்டிகைகள் போன்றவற்றில் ஏனைய இனத்தவர்கள் பங்கேற்க வேண்டும், இது புரிந்துணர்வு, நல்லிணக்கம், ஐக்கியம், சமாதானம் ஆகியவற்றுக்கு நிச்சயம் வழி வகுக்கும், பொதுநல செயற்பாட்டாளர்கள் இவ்விடயங்களில் முன்மாதிரியாக நடந்துகொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மரவள்ளி கிழங்கு துவையல் தானத்துக்காக 1500 கிலோ மரவள்ளி கிழங்கு கொள்வனவு செய்யப்பட்டது என்று காரைதீவு முகாம் பொறுப்பதிகாரி மேஜர் சமில் நிசான் ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்தார்.

# அரச ஊடக நிறுவன பதவிகளில் முஸ்லிம்கள் முற்றாக புறக்கணிப்பு

## அரசியல்வாதிகள் தட்டிக்கேட்க வேண்டுமென அல்-மீஸான் பௌண்டேஷன் கோரிக்கை

(மாளிகைக்காடு நிருபர்)

அரசாங்க ஊடக நிறுவனங்களுக்கு புதிய தலைவர்கள் மற்றும் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன மேற்படி நியமனங்களை ஒருசில தினங்களுக்கு முன்னர் வழங்கினார். இந்த நியமனங்களில் முஸ்லிம் தரப்பு முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளது. ஊடகத்துறையிலும் கல்வித்துறையிலும் ஏனைய கலை, இலக்கியத் துறைகளிலும் எத்தனையோ தகுதியான சிரேஷ்டத்துவம் கொண்டவர்களும் கல்வியியலாளர்களும் முஸ்லிம் சமூகத்துக்குள் இருக்கத்தக்கதாக இந்த புறக்கணிப்பு இடம்பெற்றுள்ளமை திட்டமிட்ட சதியாகவே முஸ்லிம் சமுகத்தினரால் பார்க்கப்படுகின்றது என அல்-மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்கா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட் டுள்ளதாவது,

கடந்த பல வருட காலமாக இலங்கை சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராக இருந்துவந்த புரவலர் ஹாசிம் உமரும் இந்த முறை எவ்வித பதவிகளிலும் நியமிக்கப்படவில்லை. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தை பொறுத்தவரை முஸ்லிம் சேவையில் ஐவேளை அதான் ஒலிபரப்புக்கு பெருந்தொகை பணத்தை வழங்கி அனுசரணை வழங்கும் பிரபல ஆடை நிறுவனம் தனது வர்த்தக நாமத்தை பயன்படுத்துவதில்லை. ஆனால், சிங்கள சேவையில் பௌத்த மத நிகழ்ச்சிகளை அனுசரணையின்றியே நடத்திச் செல்கின்றனர் என சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் பலரும் தமது ஆதங்கங்களை பொதுவெளியில் வெளிப்படையாக தெரிவித்து வருகின்றனர்.

அதேபோல் அரச ஊடக நிறுவனங்கள் அனைத்திலும் கடமையாற்றும் முஸ்லிம் ஊடகவியலாளர்களும், கட்டுப்பாட்டாளர்களும், அறிவிப்பாளர்களும் பெருந்தொகையான முஸ்லிம் அனுசரணையாளர்களை நெருங்கி நிகழ்ச்சிகளுக்கு அனுசரணை பெற்றுக்கொடுத்து வருகின்றனர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இன்று ஓரளவு நட்டமின்றி செயற்படுவதற்கு பிரதான காரணம் முஸ்லிம் சேவையில் இடம்பெறும் அனுசரணைகளே என தகவல்கள் வெளிப்படுத்துகின்றன. ஆனால், இந்த தகவல் திட்டமிட்டு மூடி மறைக்கப்படுகிறது எனும் குற்றச்சாட்டும் இருக்கிறது.

இந்த அரசாங்கத்தின் கெபினட் அமைச்சராக இருக்கும் பிரபல தொழிலதிபரும் பொறியியலாளருமான அல்ஹாபிழ் இஸட் ஹாபீஸ் நஸீர் அஹமட், அதுபோல் ஆளுந்தரப்பு, எதிர்த்தரப்பு மற்றும் சுயாதீன தரப்பு முஸ்லிம் எம்.பிக்கள் இந்த விவகாரத்தில் உடன் தலையீடு செய்யவேண்டும் என்பதுடன், முஸ்லிம் சமுகத்துக்குரிய நியாயமான நியமனங்களை பெற்றுத்தர முயற்சிக்க வேண்டும். முஸ்லிம் சமூகத்துக்குரிய உரிமைகளுக்குள் இந்த நியமனங்களும் உள்ளடங்கும் என்பதை நீங்கள் அறியாதவர்களும் அல்லர். ஆகவே, இந்த விவகாரத்தில் உடனடியாக சகல முஸ்லிம் அரசியல்வாதிகளும் தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## போடியார் புலம்பல்!



அந்த தலைவர் இந்த தலைவர் எல்லாம் பதவி விலகிறாங்க எலுவா.. ஏன் நம்மட நாட்டு தலைவர் இன்னும் பதவி விலகிறாரு இல்ல. அவரத்தானே நாடு திரண்டு வீட்டுக்கு போகச்சொல்லி போராடக்குள.. அந்த மானம் ரோசம் கெட்ட மனிசன் ஏன் பின்னடிக்கிறாரு. ஒரு வேள ரோச நரம்பு இவருக்கு மட்டும் இல்லையோ? சும்மா கிடந்த நரிக்குத்தான் இப்ப நல்ல வாசி.. ஆரக்கவுக்கப் போறாரு எண்டு பார்ப்பம்.!

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# 140 கோடி ரூபா செலவில் மண்டூர் குருமண்வெளி வாவிக்கு பாலம் அமைப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டு 4 வருடங்கள்

## எந்த புனரமைப்பும் இதுவரை இல்லையென மக்கள் விசனம்









(மண்டூர் நிருபர்)

மட்டக்களப்பு வாவியில் படுவான்கரையையும் எழுவான்கரையையும் இணைக்கும் 5 ஓடத்துறைகள் இருந்தன. சோ.உ.எதிர்மனசிங்கம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் வலையிறவு துறைக்கும் பாலம் அமைக்கப்பட்டது. மூன்றாவதாக மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிகாலத்தில் மண்முனை துறைக்கும் பாலம் அமைக்கப்பட்டது.

இந்தப் பிரதேசத்திலுள்ள துறைகளில் மிகவும் ஆழமானதும் நீளமானதுமான மண்டூர், குருமண்வெளி துறை ஆயிரம் மீற்றர் நீளம் கொண்டதாகும். இற்றைக்கு பல நூற்றாண்டுகளாக இந்த மண்டூர் குருமண்வெளி துறையினூடாக எழுவான் கரையிலிருந்தும் படுவான்கரையிலிருந்தும் பெருந்தொகையான மக்கள் ஓடங்கள் மற்றும் வள்ளங்களைப் பயன்படுத்தி பயணங்களை மேற்கொள்வது வழக்கம்.

பயணங்களை மேற்கொள்ளும்போது வாவியில் ஏற்படும் இயற்கை அனர்த்தங்கள் மற்றும் அதிகமான சுமையினால் வள்ளங்கள் நடுவாவியில் மூழ்கடிக்கப்படுவதுமுண்டு. 1993ஆம் ஆண்டு தைப்பொங்கல் தினத்தைக் கொண்டாடும் நோக்கில் தந்தை ஒருவர் மட்டக்களப்பிலுள்ள பாடசாலையில் கல்வி கற்றுவந்த தனது மகனை இந்த வாவியினூடாக வள்ளத்தில் தனது வீட்டுக்கு அழைத்துவரும்போது வாவியில் திடீர் என்று ஏற்பட்ட அதிகமான காற்றினால் அந்த வள்ளம் நீரில் மூழ்கியது. அந்த துயரச்சம்பவத்தில் தந்தையும் மகனும் அந்த வாவியிலேயே மூழ்கி மரணிக்க நேர்ந்தது.

பின்னர் இந்த ஓடத்துறையினூடாக பயணிக்கும் மக்களின் நன்மை கருதி இயந்திரப்படகுசேவை ஆரம்பிக்கப்பட்டது. இன்றுவரை அதே இயந்திரப்படகுசேவை செயற்பாட்டில் இருந்து வருகின்றது. ஆனால், இந்த இயந்திரப்படகு சேவை நிரந்தரமான தீர்வில்லை என்பதே உண்மை. காரணம், பருவ மழை காலம் வந்தால் வெல்லாவெளி ஊடான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுவிடும். அதேபோன்று கிட்டங்கி வீதி வழியான போக்குவரத்தும் தடைப்பட்டுவிடும். மக்களின் போக்குவரத்திற்கு ஒரே வழி பாதை இந்த வாவியினூடான பயணமே இப்படியே இன்றுவரை செல்கின்றன.

பிரதேசத்திலுள்ள மக்களின் கனவினை நனவாக்கும் நோக்கில் கடந்த 2017ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 17ஆம் திகதி ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய நல்லிணக்க அமைச்சின் மூலம் 140 கோடி ரூபா செலவில் மண்டூர், குருமண்வெளி குறுக்கான பாலத்திற்கான அடிக்கல் நடப்படும் என அறிவிக்கப்பட்டது. 2018ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 14ஆம் திகதி குறித்த வாவிக்கு முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சியின் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மற்றும் முன்னாள் ஐக்கிய தேசிய கட்சியின் பட்டிருப்பு தொகுதியின் அமைப்பாளர் சோ.கணேசமூர்த்தியின் வழிகாட்டலுடன் பெருந்தொகையான பொதுமக்களின் ஆதரவுடன் அடிக்கல் நாட்டப்பட்டது.

இன்று நான்கு வருடங்கள் கடந்தும் எவ்விதமான வேலைத்திட்டங்களும் நடைபெறவில்லை. இந்நிலையில், இந்த வேலைத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிக்கு என்னவானது என்பதே பிரதேசவாசிகளின் வினாவாகும்.

இன்று பல கஷ்டங்களுக்கு மத்தியில் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், வியாபாரிகள், அரச உத்தியோகத்தர்கள் தங்களின் பயணங்களை இந்த இயந்திரப் படகினூடாக மேற்கொண்டு வருகின்றனர். அதேவேளை, இந்த இயந்திரப் படகினூடாக பயணிக்கும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். மண்டூர், குருமண்வெளி ஆகிய இரு இடங்களில் இயந்திரப்படகு தரித்துநிற்கும் தரிப்பிடத்தை விட்டு குன்றும் குழியுமாக சீரற்ற கற்கள் நிறைந்த தரிப்பிடத்தில் இந்த இயந்திரப்படகு தரித்து நிற்பதால் இந்த வாகனங்களை ஏற்றி இறக்குவதில் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே, வீதி அபிவிருத்தி அதிகாரிகள் பிரதேசவாசிகள் சிரமமில்லாமல் போக்குவரத்தில் ஈடுபடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என கிராம மக்கள் கோருகின்றனர்.

# கல்முனை வலய மாணவர் நாடாளுமன்ற தேர்தலின் முதலாவது அமர்வு இன்று

(நற்பிட்டிமுனை நிருபர்)

கல்வி அமைச்சின் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் 03/2019ஆம் இலக்க சுற்றுநிருபப் பிரகாரத்தின் கீழ் அமைக்கப்பட்ட கல்முனை வலய முதலாவது மாணவர் நாடாளுமன்ற அமர்வு இன்று 15.06.2022 வலய கேட்போர்கூட நாடாளுமன்ற அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

மாணாக்கரின் எதிர்கால தலைமைத்துவம் ஆளுமை விருத்தி தேசிய மற்றும் அபிவிருத்தி எண்ணங்களை கற்கும் பருவத்தில் இருந்தே ஏற்படுத்தும் நோக்கினை இலக்காகக்கொண்டே இச்செயல்பாடு நடைமுறைப்படுத்தப்படுவதாக கல்வி முகாமைத்துவத்திற்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எச்.முகம்மட் பௌஸ், வலய இணைப்பாளர் முகம்மட் மஹ்ரூப் ஆகியோர் தெரிவித்தனர்.

முதற் செயற்பாடாக சபாநாயகர் சத்தியப்பிரமாணமும் பின் பிரதமர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் சத்தியப்பிரமாணமும் சபாநாயகர் முன்னிலையில் இடம்பெறவுள்ளதாக மேலும் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற செயலாளர் உட்பட சபாநாயகர் அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள் உரையும் இங்கு இடம்பெறவுள்ளதாகவும் மேலும் குறிப்பிட்டனர். அமைச்சர்களின் விசேட அபிவிருத்தி வேலைத்திட்ட முன்மொழிவுகளும் இங்கு முன்வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்செயற்றிட்டம் பெற்றோர் கல்விமான்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுவருகிறது. இன்றைய நிகழ்வில் வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் உட்பட பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள, செயற்றிட்ட உத்தியோகத்தர்கள், இணைப்பாளர்கள் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# காணாமல்போனவரை கண்டுபிடிக்க உதவுமாறு உறவினர்கள் கோரிக்கை





(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை, சிராஜ் நகர் பகுதியில் வசித்துவந்த அப்துல் வஹாப் ராஹிமீன் என்பவர் காணாமல்போயுள்ளதாக அவரது உறவினர்கள் தம்பலகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த நான்காம் மாதம்முதல் இன்று வரைக்கும் அவரை உறவினர்கள் தேடி வந்த நிலையில், இன்னும் அவர் கிடைக்கவில்லை எனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

கிண்ணியாவிற்கு சென்று வருவதாக கூறிவிட்டு சென்றவர் இன்றுவரை வீட்டுக்கு வரவில்லை எனவும் இவர் தொடர்பிலான தகவல் தெரிந்தால் தம்பலகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கோ 0718591192 அல்லது 076 023 3478 எனும் இலக்கத்திற்கோ அறிவிக்குமாறு பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# குடாக்கரையில் குழாய்க்கிணறு அமைக்கும் திட்டம்



(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபைக்குட்பட்ட குடாக்கரை பகுதியில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் மூலம் விநியோகிக்கப்படுகின்ற நீர் விநியோகம் அனைத்து குடும்பங்களுக்கும் வேகமாக கிடைக்கப்பெறுவதில்லை என்றும் தினந்தோறும் நீர் விநியோகம் விநியோகிக்கப்படுவதில்லை என்றும் இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினை பெற்றுத்தருமாறும் பொதுமக்களும் அப்பகுதி சங்கங்களும் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் உப தவிசாளர் முகமட் நௌபரிடம் எழுத்துமூலமான கோரிக்கையினை முன்வைத்திருந்தனர்.

இதற்கான நிரந்தர தீர்வினை பெற்றுக்கொடுக்கும் ஓர் அங்கமாக குடாக்கரை பிரதேசத்தில் ஆழ்துளை குழாய்க்கிணறு அமைக்கும் திட்டம் மக்கள் பங்களிப்புடன் தொண்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் உப தவிசாளர் முகமட் நௌபரால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

# மட்டக்களப்பு தாண்டவன்வெளி குளக்கட்டு கண்ணகியம்மன் ஆலய தீமிதிப்பு உற்சவம்





(மண்முனை நிருபர்)

மட்டக்களப்பில் புகழ்பெற்ற தாண்டவன்வெளி குளக்கட்டு கண்ணகியம்மன் ஆலய அலங்கார திருச்சடங்கு உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நேற்று திருக்குளிர்த்தி பாடி அம்மன் உற்சவம் நிறைவுபெற்றது.

தாண்டவன்வெளி, ஏரன்ஸ் வீதி வாழ் மக்களால் பத்தாம் நாள் சடங்கு உற்சவத்தை சிறப்பிக்கும் முகமாக குருந்தையடி பிள்ளையார் ஆலயத்திலிருந்து தீ குழிக்கான தீக்கட்டை மற்றும் மடப்பெட்டிகள் உள்ளிட்ட பூசைப் பொருட்கள் எடுத்துவரும் வைபவம் ஞாயிற்றுக்கிழமை (12) இரவு மேள தாள வாத்தியங்கள் முழங்க காவடிகள் ஆடிவர கண்ணகியம்மன் ஆலயத்திற்கு எடுத்துவரப்பட்டது.

கண்ணகியம்மன் ஆலய பிரதம குரு சிதம்பரசாந்தரூபக் குருக்களால் பூசைகள் நிகழ்த்தப்பட்டன. தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணியளவில் தீக்குழிக்கான தீ மூட்டும் வைபவம் இடம்பெற்றது.

10ஆம் நாள் திருச்சடங்கினை சிறப்பிககும் முகமாக திங்கட்கிழமை (13) அதிகாலை ஆலய பிரதம பூசகர் சித்திரவேல் ஐயா தலைமையில் தீமிதிப்புக்கான கிரியைகள் இடம்பெற்று, தீமிதிப்பு வைபவம் மிக சிறப்புடன் இடம்பெற்றது.

நேற்று (14) அதிகாலை 5 மணியளவில் அம்பாளின் திருக்குளிர்த்தி பாடி உற்சவம் இனிதே நிறைவுபெற்றது.

# 1.5 மில்லியன் ரூபா செலவில் நாவற்குடா மேல்மாடி வீதி கார்பட் வீதியாக புனரமைப்பு

(கல்லடி நிருபர்)



எழுச்சிமிகு மாநகரம் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட நாவற்குடா மேல் மாடி வீதியினை தார் வீதியாக அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் (13) ஆரம்பித்துவைக்கப்பட்டதாக மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான பாதீட்டு நிதியினூடாக மாநகர சபையின் 15ஆம் வட்டார உறுப்பினர் ம.நிஷ்கானந்தராஜாவின் பாதீட்டு முன்மொழிவுக்கமைய 1.5 மில்லியன் ரூபா செலவில் 150 மீற்றர் கொண்டதான குறித்த வீதி அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இதன்போது மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தியாகராசா சரவணபவன், மாநகர சபை உறுப்பினர்களான ம.நிஷ்கானந்தராஜா மற்றும் த.இராஜேந்திரன் ஆகியோர் இவ்வீதிக்கான புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்து வைத்தனர்.

மாநகர சபையின் நிதி மூலமான வேலைகளை நேரடியாக மாநகர சபையானது அதன் ஆளணி வளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்வதன் ஊடாக உத்தேச மதிப்பீட்டினை விட மேலதிகமாக 40 சதவீதத்துக்கும் அதிகமான வேலைகளை செய்யக் கூடியதாக இருப்பதோடு, அதனோடு இணைந்த வகையில் மேலதிகமாக ஒரு வீதியினையும் அமைத்து பொதுமக்களிடம் கையளிக்க முடிவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# அம்பாறையில் இளைஞர் - யுவதிகளுக்கான சமூக பங்குபற்றுதல் தொடர்பான பயிற்சிப்பட்டறை









(சம்மாந்துறை நிருபர்)

ஆசிய மன்றத்தின் அனுசரணையில் கப்சோ நிறுவனத்தினால் அமுல்படுத்தப்பட்டுவரும் "இலங்கையில் சமூக ஒருமைப்பாட்டினை வலுப்படுத்தல்" எனும் தலைப்பில் சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்குடன் அம்பாறை மாவட்ட மூவின இளைஞர், யுவதிகளுக்கான ஒருநாள் மொழித்திறன் விருத்தி (தமிழ்-சிங்களம்) செயலமர்வு அண்மையில் அம்பாறை கோப்இன் மண்டபத்தில் நடைபெற்றது.

கப்சோ நிறுவனத்தின் திட்ட பணிப்பாளர் ஏ.ஜே.காமில் இம்டாட் தலைமையில் தெரிவுசெய்யப்பட்ட சுமார் 25 இளைஞர் யுவதிகள் இச்செயலமர்வில் கலந்துகொண்டனர்.

எதிர்காலத்தில் அம்பாறை மாவட்டத்தில் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் "நாம் இலங்கையர் "என்ற தேசிய உணர்வை மேம்படுத்தி ஐக்கியமாக வாழ்வதற்கு சமூக பங்குபற்றுதல் எவ்வளவு தூரம் முக்கியம் என்பது இங்கு ஆராயப்பட்டது. இதன் வளவாளராக திரு. பிரகீத் கலந்து கொண்டார். இதன் ஏற்பாடுகளை நிறுவனத்தின் கள உத்தியோகத்தர்களான இஸ்மத், சுமன் மற்றும் ஜப்ரான் ஆகியோரும் நெறிப்படுத்தினர்.

கப்சோ நிறுவனமானது எதிர்காலத்தில் பல கட்டங்களாக இந்த இளைஞர் குழு சமூக நல்லிணக்க வேலைத்திட்டங்களை செயற்படுத்த இருப்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

# சம்மாந்துறை அல்-மஸ்ரபுல் இஸ்லாமிய்யு கூட்டுறவு சங்க ஆவணப்படம் வெளியீடு











(மாளிகைக்காடு, கல்முனை நிருபர்கள்)

சம்மாந்துறை அல்-மஸ்ரபுல் இஸ்லாமிய்யு சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்க கடன், வைப்புச்சேவை பற்றி ஸம் ஸம் பவுண்டேஷன் தயாரித்த ஆவணப்படம் வெளியிடும் நிகழ்வு சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் சம்மாந்துறை பிரதேச சபை முன்னாள் தவிசாளரும், அல்-மஸ்ரபுல் இஸ்லாமிய்யு சிக்கன கடன் கூட்டுறவு சங்கத்தின் தலைவருமான ஐ.எம்.இப்ராஹீம் தலைமையில் நடைபெற்றது.

அல்-மஸ்ரபுல் இஸ்லாமிய்யு இஸ்லாமிய கடன், வைப்புச் சேவை கடந்த 25 வருடங்களாக சம்மாந்துறையில் இயங்கி வருகிறது. தற்போது கூட்டுறவுத் திணைக்களத்தின் ஊடாக அரச அங்கீகாரத்தைப் பெற்று நவீனமுறையில் சேவையாற்றி வருகின்றது. வட்டியிலிருந்து சமூகத்தை பாதுகாப்பதோடு மக்களின் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதுடன் அவர்களது பொருளாதார கஷ்டங்களை நிவர்த்திசெய்வதற்கு கடன் வழங்கியும் இந்நிறுவனம் பாரிய சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அவர்களது பணிகளைப் பாராட்டி ஊக்குவிப்பதோடு அப்பணிகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அல்மஸ்ரபுல் இஸ்லாமிய்யு கடன், வைப்புச் சேவை பற்றி ஸம் ஸம் பவுண்டேஷன் இந்த ஆவணப்படத்தை தயாரித்து வெளியிட்டுள்ளது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் ஏ.எல்.அஸ்மி, சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, ஸம் ஸம் பவுண்டேஷன் பணிப்பாளர் முப்ஃதி எம்.எச்.எம்.யூஸுப், கூட்டுறவு திணைக்கள சிரேஷ்ட கூட்டுறவு அதிகாரி ஐ.எல்.எம்.பரீட், அம்பாறை மாவட்ட பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், பெருந்திரளான உலமாக்கள், மதரஸாக்களின் நிர்வாகிகள், பொது அமைப்புகளின் முக்கிய நிர்வாகிகள், சம்மாந்துறை அல்-மஸ்ரபுல் இஸ்லாமிய்யு சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்க பணிப்பாளர் சபையினர் மற்றும் நிர்வாகத்தினர், ஸம் ஸம் பவுண்டேஷன் நிர்வாகிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# புனித ஹஜ் யாத்திரிகர்கள் முகக்கவசம் அணிய அவசியமில்லை

## சவூதி அரசு அறிவிப்பு



"ஹஜ் புனித யாத்திரை வரும் பக்தர்கள் கட்டாயம் முகக் கவசம் அணியத் தேவையில்லை'' - என சவூதி அரேபிய அரசு அறிவித்துள்ளது.

உட்புற வழிபாடுகளின்போது முகக்கவசம் அணிய அவசியமில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 8 இலட்சத்திற்கும் அதிகமான வெளிநாட்டு பக்தர்களுக்கு ஹஜ் பயணம் மேற்கொள்ள சவூதி அரசு அனுமதித்துள்ளது.

தடுப்பூசி சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டியதில்லை என்றும் மக்கா மற்றும் மதீனாவில் வழிபாடுகளின்போது மட்டும் முகக்கவசம் அணிய வேண்டும் எனவும் சவூதி அரசு தெரிவித்துள்ளது.

# ரஷ்யப் படைகள் மிகவும் மூர்க்கத்தனமானவை

## போப் பிரான்சிஸ் தெரிவிப்பு



உக்ரைன் மீது தாக்குதல் நடத்திவரும் ரஷ்யப் படை மிகவும் மூர்க்கத்தனமானது என போப் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவுடான போரில் கடுமையான விளைவுகளையும், இழப்புகளையும் சந்தித்துவரும் உக்ரைன், சமீப நாட்களாக ஆயுதப் பற்றாக்குறை காரணமாக வலுவான எதிர் தாக்குதலைத் தர முடியாமல் திணறி வருகிறது.

அமெரிக்கா உக்ரைனுக்கு ஆயுதங்களையும் அதிநவீன ஏவுகணைகளையும் அனுப்பி வைத்தும் ரஷ்யாவுக்கு சரியான பதிலடி தர முடியவில்லை.

உக்ரைனின் 30 சதவீதமான பகுதிகளை ஆக்கிரமித்ததுடன், லுஹான்ஸ்க் பிராந்தியத்திலுள்ள சியெவெரோடொனட்க்ஸ் நகரை முழுமையாகக் கைப்பற்றுவதில் ரஷ்யா மிகுந்த தீவிரம் காட்டி வருகிறது. இதுவரை இதற்காக போரிட்டுவரும் தங்கள் நாட்டுப் படையினருக்கு உதவுவதற்காக, கூடுதல் படையினரை ரஷ்யா அனுப்பி படைப்பலத்தை அதிகரித்துள்ளது.

மேலும், ரஷ்யாவின் தாக்குதலுக்கு தினமும் 100இலிருந்து 200 வீரர்களை இழந்து வருவதாக உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கியின் மூத்த உதவியாளர் மைக்காலோ போடோலியாக் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், உக்ரைன் போர் குறித்து பேசிய போப் பிரான்சிஸ், ''ரஷ்யாவின் படைகள் மிகவும் மிருகத்தன்மையும் கொடூரமும் கொண்டவை. யாராவது உக்ரைன் மீது போர் தொடுக்க தூண்டியிருக்கலாம்'' - எனத் தெரிவித்துள்ளார்.

# தவறிலிருந்து தப்பிக்க புதிய வழி



அண்மைக்காலமாக பல்வேறு புதிய மாற்றங்களையும், வசதிகளையும் வட்ஸ்அப் அறிமுகப்படுத்தி வருகிறது. அந்தவகையில், தற்போது மற்றுமொரு புதிய வசதியை அறிமுகம் செய்யும் முயற்சியில் இந்நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

நாம் ஒரு செய்தியை அனுப்பிய பின், அதில் எதுவும் எழுத்துப்பிழைகள் இருப்பின், அதை எடிட் செய்து கொள்ளக்கூடிய வசதியை வழங்கும் முயற்சியில் வட்ஸ்அப் இறங்கியுள்ளது. பல சமயங்களில் ஏதாவது எழுத்துப் பிழையுடன் ஒரு செய்தியை அனுப்பிய பின், உடனே அதை சரிசெய்துகொள்ள நினைத்தாலும் முடியாமல் போய்விடுகிறது. வேண்டுமானால், அந்த பிழையை குறிப்பிட்டு, மற்றுமொரு குறுஞ்செய்தியை அனுப்பலாம். ஆனால், முதலில் நாம் அனுப்பிய பிழை செய்தி அப்படியேதான் இருக்கும். அது மற்றவர்களுக்கும் போர்வெர்ட் செய்யப்படுகிறது. திருத்திக்கொள்ளுமாறு நாம் கேட்டுக்கொண்ட மற்றொரு செய்தியுடன் சேர்த்து, பெரும்பாலானோர் போர்வேர்ட் செய்வதில்லை. இதனால் நம் மதிப்பு பலரிடம் சரியவும் வாய்ப்பிருக்கிறது. இனி இந்த புதிய வசதி வந்தால், ஏற்கனவே அனுப்பிய செய்தியை எடிட் செய்து, இது போன்று எழக்கூடிய பிரச்சினைகளை தவிர்க்க முடியும்.

# இனக்குழுக்களிடையே மோதல்: சூடானில் 100 பேர் உயிரிழப்பு



சூடானில் இரண்டு இனக்குழுக்களிடையே நடந்த மோதலில் 100இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

ஆபிரிக்க கண்டத்தின் வடகிழக்குப் பகுதியிலுள்ள சூடான், பரப்பளவு அடிப்படையில் ஆபிரிக்கக் கண்டத்திலேயே மிகப்பெரிய நாடு. வடக்கில் எகிப்தும், கிழக்கில் எரித்திரியாவும் அமைந்திருக்கும் சூடானில் பெரும்பாலானோர் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுகின்றனர். சூடானின் பிரதமராக இருந்த அப்தல்லா ஹம்டொக் (Abdalla Hamdok) அரசுக்கு எதிராக இராணுவத்தில் ஒரு பிரிவினர் செயற்படத் தொடங்கினர். இதனைத் தொடர்ந்து கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் இராணுவம் சூடானில் ஆட்சியை கைப்பற்றியது.

இதனை சீனா, அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள் கடுமையாக எதிர்த்தன. ஆனால், தற்போதுவரை இராணுவமே சூடான் அரசை நிர்வகித்து வருகிறது.

இதனையடுத்து அங்கு அவ்வப்போது இனக் குழுக்களுக்கிடையேயான மோதல் வலுத்துவருகிறது. அந்தவகையில் கடந்த ஒரு வாரமாகவே மோதல்கள் அதிகரித்துள்ளன.

இதுகுறித்து ஐக்கிய நாடுகள் சபை தரப்பில், "சூடானின் மேற்கு பகுதியிலுள்ள டார்ஃபூரில் கடந்த ஒரு வாரமாக மோதல் இடம்பெற்று வருகிறது. மோதல் காரணமாக சுமார் 5,000இற்கும் அதிகமான குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. வன்முறை காரணமாக 20 கிராமங்கள் தீக்கிரையாகியுள்ளன. இதுவரை 100இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இந்த வன்முறை உடனடியாக நிறுத்தப்படாவிட்டால் நிறைய உயிர்கள் பலியாக நேரிடும். இவை தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இது அங்குள்ள அனைத்து சமூகத்துக்கு தீமையாக முடியும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சூடானில் ஏப்ரல் மாதம் நடந்த மோதலில் 150இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலக செய்திகள்

# ஈராக்கில் தொடர்ந்து வீசும் புழுதிப் புயல்



ஈராக்கை செந்நிற போர்வையால் போர்த்தியதுபோல் வீசிய புழுதிப் புயலால் பல்வேறு நோய்த் தாக்குதல்களுக்கு மக்கள் உள்ளாகியுள்ளனர்.

பக்தாத் உள்ளிட்ட நகரங்களில் தொடர்ந்து வீசி வரும் புழுதிப் புயலால் சுவாசக் கோளாறு, சருமப் பிரச்சினைகளுக்குள்ளாகி நூற்றுக்கணக்கான மக்கள் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மோசமான வானிலை காரணமாக பக்தாத் சர்வதேச விமான நிலையம் வழக்கமான பணிகளை மேற்கொள்ள முடியாமல் திணறி வருகிறது. கொளுத்தும் வெயிலுடன், புழுதிப் புயலும் சேர்ந்து வீசுவதால் மக்கள் கடும் அவதிக்குள்ளாகினர்.

# பர்கின பாசோவில் கிளர்ச்சி கும்பல் அட்டூழியம்: குழந்தைகள் - பெண்கள் உட்பட 165 பேர் படுகொலை




மேற்கு ஆபிரிக்க நாடான பர்கின பாசோவில் புலம்பெயர் மக்கள் வாழும் கிராமத்தில் கிளர்ச்சிக் குழு நடத்திய கண்மூடித்தன துப்பாக்கிச் சூட்டில் 100 பேர் கொல்லப்பட்டனர்.

நைஜர் நாட்டை ஒட்டியுள்ள எல்லையோர கிராமத்திற்குள் நள்ளிரவில் புகுந்த கிளர்ச்சிக் கும்பல் குழந்தைகள், பெண்கள் என பாரபட்சமின்றி தாக்குதல் நடத்தியுள்ளது.

தாக்குதலில் 165 பேர் வரை கொல்லப்பட்டதாக உள்ளூர் நிர்வாகம் தெரிவித்துள்ளது. தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்காத நிலையில் அல்-கொய்தா அல்லது ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்புகளின் செயல் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# 15,000 செம்மறி ஆடுகளுடன் கடலில் மூழ்கியது 'பத்ர் 1' கப்பல்



சூடான் அருகே ஆயிரக்கணக்கான செம்மறி ஆடுகளை ஏற்றிச்சென்ற கப்பல் கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

சுவாகின் துறைமுகத்திலிருந்து 15,800 ஆடுகளை ஏற்றிக்கொண்டு 'பத்ர் 1' என்ற கப்பலொன்று சவூதி அரேபியாவிற்கு புறப்பட்டுச் சென்றது.

கப்பலில் ஏற்றக்கூடிய எடைக்கும் அதிகமான அளவில் ஆடுகளை ஏற்றியதாக கூறப்படுகிறது. இதனால் புறப்பட்ட சில மணி நேரத்திலேயே கப்பல் கவிழ்ந்தது.

அதிலிருந்த பணியாளர்கள் மீட்கப்பட்ட நிலையில், செம்மறி ஆடுகள் கப்பலோடு கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளன.

# ஐ.நா. மனித உரிமைகள் தலைவர் பதவிக்கு மீண்டும் போட்டியில்லை



ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்கு மீண்டும் போட்டியிடப் போவதில்லை - என்று சிலியின் முன்னாள் ஜனாதிபதி மிஷெல் பாச்லெட் (Michelle Bachelet) அவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரான மிஷெல் பாச்லெட், அண்மையில் சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டார். சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்தில் உய்குர் முஸ்லிம்கள் நடத்தப்படும் விதம், அங்கு மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பான குற்றச்சாட்டு உள்ளிட்டவை குறித்து பாச்லெட் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்திருந்தன.

மிஷெல் பாச்லெட்டின் 4 ஆண்டு பதவிக் காலம் ஓகஸ்ட் 31ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. இந்நிலையில், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிறப்புக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. அதில், 'இதுதான் தன்னுடைய கடைசி உரை' என அவர் குறிப்பிட்டார். இது குறித்து விளக்கமளித்த செய்தித் தொடர்பாளர், ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவர் பதவிக்கு மிஷெல் பாச்லெட் மீண்டும் போட்டியிடப் போவதில்லை - என்றார்.

# உக்ரைனில் சேதமடைந்த கட்டடங்களுக்கு மத்தியில் படிப்பு முடித்த மாணவர்களின் போர் நினைவு ஆல்பம்

உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் நீடித்துவரும் நிலையில், குண்டுவீச்சில் உருக்குலைந்த கட்டடத்திற்கு மத்தியிலிருந்து உக்ரைன் மாணவர்கள் தங்களது போட்டோக்களை எடுத்து வெளியிட்டுள்ளனர்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் இன்று 111ஆவது நாளாகவும் நீடித்துள்ள நிலையில், குண்டுவீச்சில் உருக்குலைந்த கட்டடத்திற்கு மத்தியிலிருந்து உக்ரைன் மாணவர்கள் தங்களது போட்டோக்களை எடுத்து வெளியிட்டுள்ளனர்.

போரின் தாக்கம் எவ்வாறு உள்ளது என்பதை இந்த போட்டோக்கள் எடுத்துக்காட்டுகின்றன.

உக்ரைன் போரின் நினைவாக எடுக்கப்பட்டுள்ள இந்த முக்கிய போட்டோக்களை நாளைய சந்ததியினரிடம் காண்பிக்கும் நோக்கத்துடன் இந்த போட்டோக்களை அங்கு படிப்பு முடித்த மாணவர்கள் வெளியிட்டுள்ளனர்.



## கணவரை கொலை செய்வது எப்படி?

# சம்பவத்தை முடித்துவிட்டு கட்டுரை எழுதிய பெண் எழுத்தாளர்

## 2 ஆண்டுகளுக்குப் பின் பொலிஸில் சிக்கிய ஸ்டோரி



''கணவரை கொலை செய்வது எப்படி?'' என்ற கட்டுரையின் மூலம் பிரபலமான அமெரிக்க பெண் எழுத்தாளருக்கு தனது கணவரை கொலை செய்த வழக்கில் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பல குறுநாவல்களை எழுதியுள்ள நான்சி கிராம்ப்டனின் கணவரும், சமையல் கலை நிபுணருமான டோனியல் கிரெய்க், கடந்த 2018ஆம் ஆண்டு அவர் சமையல் வகுப்புகள் நடத்திவந்த நிறுவனத்தில் சுட்டு கொலை செய்யப்பட்டார்.

அவரது பெயரில் இருந்த 9 கோடி ரூபா இன்சூரன்ஸ் பணமும், இரண்டேகால் கோடி ரூபா வீடும் நான்சி வசம் சென்றது.

கொலை நடந்து 2 ஆண்டுகளுக்குப் பின் அப்பகுதியில் பதிவான சிசிரிவி காட்சிகளை பொலிஸார் ஆராய்ந்தபோது நான்சி அங்கு இருந்துள்ளமை தெரியவந்தது.

இன்சூரன்ஸ் பணத்திற்காக அவர் கணவரை கொலை செய்தது விசாரணையில் தெரியவந்துள்ளது.

# விற்பனை செய்யாமல் பதுக்கப்பட்ட அரிசி தொகை சிலாபத்தில் மீட்பு





## வியாபாரிக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(ஜூட் சமந்த)

அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த அரிசி தொகை நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் புத்தளம் அலுவலக அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அந்த அரிசி தொகையை சீல் வைக்கவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சிலாபத்திலுள்ள விற்பனை நிலையமொன்றிலிருந்த அரிசி தொகையே இவ்வாறு நேற்று முன்தினம் (13) நுகர்வோர் அதிகாரசபையின் அதிகாரிகளால் சீல் வைக்கப்பட்டுள்ளது.

அரிசியை மறைத்து வைத்து கொண்டு விற்பனை செய்யாத, விற்பனை நிலையமொன்று தொடர்பில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்துள்ளது. அதற்கமைய, போலியான கொள்வனவாளர் ஒருவரை அனுப்பி அரிசி கொள்வனவு செய்ய அதிகாரிகள் முயற்சித்துள்ளனர். இருந்தபோதிலும், குறித்த விற்பனை நிலையத்தின் வியாபாரி அரிசி விற்பனை செய்ய மறுப்பு தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர், குறித்த விற்பனை நிலையத்தை பரிசோதனைக்குட்படுத்தியபோது அங்கு களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த 5 கிலோ கிராம் நிறையுடைய 107 சம்பா அரிசி பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அதனை தொடர்ந்து அந்த அரிசி தொகையை கைப்பற்றி சீல் வைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். அரிசி விற்பனை செய்வதற்கு மறுப்பு தெரிவித்த குறித்த வியாபாரிக்கு எதிராக சிலாபம் நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்தல் மற்றும் அரிசியை பதுக்கிவிட்டு நுகர்வோருக்கு விற்பனை செய்ய மறுக்கும் வியாபாரிகளை தேடிக்கண்டுபிடிக்க, புத்தளம் மாவட்டத்தில் தொடர் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் மேலும் சுட்டிக்காட்டினர்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் முகநூல் பக்கத்தில் தமிழ் மொழி புறக்கணிப்பு

(எம்.ஐ.லெப்பைத்தம்பி)

இலங்கையின் வருமானத்தில் அதிக பங்களிப்பினை வெளிநாட்டு வேலைவாய்ப்பினூடாக வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கை தொழிலாளர்கள் பெற்றுக்கொடுத்து வருகின்றனர்.

அதேநேரம், நாடு இன்று எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் உள்நாட்டில் வேலைவாய்ப்பின்மை போன்றவற்றுக்கு தீர்வாக அதிகஇளைஞர்களுக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்பினை அதிலும் குறிப்பாக ஜப்பான், தென் கொரியா போன்ற நாடுகளில் பெற்றுக் கொடுக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அதன் பயனாக அதிக இளைஞர்கள் கடந்த ஒரு சில மாதங்களில் வேலைவாய்ப்பினைப் பெற்றுச் சென்றுள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் ஏனைய மொழிப்பரீட்சைகள் தொடர்பான விடயங்கள் அனைத்தும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் முகநூல் (https://www.facebook.com/slbfeOfficial ) பக்கத்தினூடாக தனிச்சிங்கள மொழியில் மாத்திரமே வெளியிடப்படுகின்றன.

இதன் காரணமாக, தமிழ் மொழி பேசும் இளைஞர்களிடத்தில் இவ்வாறான தகவல்கள் போய்ச்சேர்வதிலுள்ள சிக்கல் நிலை காரணமாக பெரும்பாலான தமிழ் மொழி பேசும் இளைஞர்கள் இவ்வாறான வேலைவாய்ப்புகளில் உள்ளீர்க்கப்படாமைக்கும் ஆர்வங்காட்டாமைக்கும் காரணமாகின்றன.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனஞ்செலுத்தி இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் முகநூல் பக்கத்தில் மும்மொழிகளிலும் அல்லது தமிழ், சிங்கள மொழிகளாவது வேலைவாய்ப்பு மற்றும் மொழிப்பரீட்சைகள், மொழி வகுப்புகள் தொடர்பான தகவல்களைப் பிரசுரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

இது தொடர்பில் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் அமைச்சின் அதிகாரிகள், திணைக்களத்தின் கவனத்திற்கும் தமிழ் பேசும் மக்கள் பிரதிநிதிகள் எடுத்துச்செல்ல வேண்டியது அவசியமாகின்றது.

# களனிவெலி புகையிரத சேவை நேர அட்டவணையில் மாற்றம்

களனிவெலி புகையிர வீதியில் பயணிக்கும் புகையிரத நேரங்களில் இன்றிலிருந்து (15) மாற்றம் கொண்டுவரப்படவுள்ளதாக புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வீதியில் பொறுப்பான புகையிரத நிலையங்களிலிருந்து கொழும்பு, புறக்கோட்டை வரை புதிய புகையிரதங்கள் போக்குவரத்துக்கு இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இந்நிலையில், களனிவெலி புகையிரத வீதியில் பயணிக்கும் புகையிரத போக்குவரத்து கால அட்டவணையில் சிறிய மாற்றம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, பொறுப்புடைய புகையிரத நிலையத்திலிருந்து காலை 6.20 மணிக்கு பயணத்தை ஆரம்பிக்கும் புதிய புகையிரதம், கொழும்பு, புறக்கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து மாலை 4.00 மணிக்கு மீண்டும் புறப்படவுள்ளதாக புகையிரத திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# முச்சக்கரவண்டி மீது மரம் முறிந்து விழுந்ததில் நால்வர் படுகாயம்

காலி - உடுகம பிரதான வீதியில் கொட்டவ பிரதேசத்தில் பயணித்துக்கொண்டிருந்த முச்சக்கரவண்டி மீது, மரமொன்று முறிந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் காலி, கராபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக யக்கலமுல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் மகன்மார் இருவரே இவ்வாறு படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர். தாயும் மகனொருவரும் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் ஹினிதும பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் தந்தை மற்றும் தாய் 58, 56 வயதுடையவர்கள் என்பதுடன் மகன்மார் இருவரும் 30 மற்றும் 26 வயதுடையவர்கள் என பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

தந்தை காலி, கராபிட்டிய வைத்திய சாலையில் இதற்கு முன்னர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வந்துள்ளார். இவ்வாறு சிகிச்சைப் பெற்று வந்தநிலையில், அவரை மீண்டும் முச்சக்கரவண்டியில் வீட்டுக்கு அழைத்துச் சென்று கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. மகன்களில் ஒருவரே முச்சக்கரவண்டியை செலுத்தியுள்ளதுடன் அவர் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வரும் மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது.

கொட்டவ காட்டுப்பகுதியிலிருந்த 150 அடியுடைய பழைமையான மரமொன்று இன்னுமொரு மரத்தின் மீது விழுந்து பின்னர், அந்த மரம் வீதியில் பயணித்துகொண்டிருந்த முச்சக்கரவண்டி மீது விழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலிஸாரின் முயற்சியினால் காயங்களுக்குள்ளானவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் முச்சக்கரவண்டி சேதமடைந்துள்ளது.

# மறுசீரமைப்பிற்கான மக்கள் இயக்கத்தின் பெரும்பாலான யோசனைகளுக்கு பிரதான எதிர்க்கட்சி இணக்கம்

புதிய நவீனத்துவ இலங்கையை உருவாக்கும் நோக்கில் மறுசீரமைப்புக்கான மக்கள் இயக்கம் நேற்று முன்தினம் (13) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கூடியது. மறுசீரமைப்பிற்கான மக்கள் இயக்கத்தின் பெரும்பாலான யோசனைகளுக்கு ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி இணக்கம் தெரிவித்தது.

மறுசீரமைப்புத் திட்டத்தில் 13அம்ச அணுகுமுறைகள் உள்ளடங்கியுள்ளதுடன், இனம், மதம், பாலினம், வர்க்கம் மற்றும் பிராந்திய வேறுபாடுகள் இன்றி அனைத்து மக்களுக்கும் ஏற்பட்டுள்ள ஆபத்தான நிலைமையை சீர்செய்து நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதே இந்த சீர்திருத்தத் திட்டத்தின் முதன்மை நோக்கமாக அமைந்துள்ளது.

அனைத்து குடிமக்களின் கண்ணியத்தையும் அபிமானத்தையும் பாதுகாக்கும் ஊழலற்ற திறமையான, ஜனநாயக, நவீன அரசியல் மற்றும் சமூக கட்டமைப்பை உருவாக்குவதனை நோக்காகக் கொண்டு, அனைத்து சமூக உறவுகளிலும் ஆழமான மாற்றத்தை காண்பது இதன் எதிர்பார்ப்பாகும்.

இந்த கருத்தாடலை மேலும் விரிவுபடுத்தும் முகமாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் ஒரு செயலகமொன்றை அமைக்கவும், இந்த கருத்தாடலைத் தொடங்குவதற்குத் தேவையான உதவிகளை வழங்கவும் முடிவு செய்யப்பட்டது.



ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள், எதிர்க்கட்சி சார்ந்த அரசியல் கட்சிகளின் தலைவர்கள், சிவில் ஆர்வலர்கள் மற்றும் கலைஞர்கள் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# சந்தேகத்துக்கிடமான முறையில் பெண்ணொருவர் உயிரிழப்பு

தியத்தலாவை, கஹகொல்ல பிரதேசத்திலுள்ள வீடொன்றில் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்திருந்த பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கஹகொல்ல, தியத்தலாவை பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயிரிழந்த பெண்ணின் கணவர் மற்றும் பிள்ளைகள் இருவரும் வீட்டில் இல்லாத சந்தர்ப்பத்தில் குறித்த பெண் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்த நிலையில், சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரேத பரிசோதனைக்காக சடலம் தியத்தலாவை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# சதொச விற்பனை நிலையத்தை உடைத்து அரிசி உள்ளிட்ட பொருட்கள் திருட்டு

## பாணந்துறையில் சம்பவம்

பாணந்துறை, நல்லுருவ சதொச விற்பனை நிலையத்தை உடைத்து அரிசி மற்றும் தேங்காய் எண்ணெய் என்பவை திருடப்பட்டுள்ளதாகவும் கிடைத்த முறைப்பாட்டுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பின்வத்த பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சதொச விற்பனை நிலையத்தின் முகாமையாளரினால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த விற்பனை நிலையத்தின் பின்னால் இருக்கும் தகடு துண்டு உடைக்கப்பட்டுள்ளமை முன்னெடுக்கப்பட்ட ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. விற்பனை நிலையத்தில் பாதுகாப்பு கெமரா எதுவும் பொறுத்தப்பட்டிருக்கவில்லை என்றும், ஜன்னலினூடாக உள் நுழைந்துள்ளதாக கைவிரல் ரேகை பரிசோதனை அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

அரிசிமற்றும் தேங்காய் எண்ணெய் உள்ளிட்ட பொருட்கள் எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாக முகாமைத்துவம் குறிப்பிட்டுள்ளதுடன், திருடப்பட்டுள்ள பொருட்களின் பெறுமதி இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லையென பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பாற்பண்ணையாளர்களை ஊக்குவிக்க அமெரிக்க விவசாயத் திணைக்களத்தினால் 27 மில்லியன் டொலர் நிதி உதவி





அமெரிக்க விவசாயத் திணைக்களத்தின் "முன்னேற்றத்திற்கான உணவு" (Food for Progress) எனும் வேலைத்திட்டத்தில் பங்கேற்கும் பாற்பண்ணையாளர்களின் பால் உற்பத்தியை இரட்டிப்பாக்கும் நோக்குடன், இலங்கை விவசாயத் திணைக்களத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

27 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இந்த செயற்றிட்டத்துக்கான இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று முன்தினம் (13) கைச்சாத்திடப்பட்டதுடன் இந்நிகழ்வில் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் கலந்துகொண்டார்.

இலங்கை அரசாங்கத்துடனான நெருங்கிய பங்களிப்புடன், இந்தச் செயற்றிட்டம் கடந்த 2017ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் இச்செயற்றிட்டத்தினால் ஏற்கனவே 25 ஆயிரம் இலங்கை பாற்பண்ணையாளர்கள் பயனடைந்துள்ளனர். அவர்களில் பால் உற்பத்தி இதுவரை சராசரியாக 68 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

இலங்கையின் உணவு பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி செய்யும் வகையிலான அமெரிக்காவின் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக, 80 ஆயிரம் இலங்கையர்கள் இந்த திட்டத்தின் மூலம் உதவி பெற்றுக்கொள்வார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கொவிட் - 19 தொற்று உள்ளிட்ட எதிர்பாராத தாமதங்களுக்குப் பின்னர், அமெரிக்க தூதரகம் மற்றும் இலங்கை விவசாயத் திணைக்களம் என்பன இந்த ஒப்பந்தத்தை நேற்று முன்தினம் இறுதி செய்தன.

இதன்போது கருத்து தெரிவித்த அமெரிக்க தூதுவர் ஜூலி சங்,

இந்த 127 மில்லியன் டொலர் உதவியானது, இலங்கையில் நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிப்பதில் அமெரிக்கா கொண்டுள்ள பல வருட உறுதிப்பாட்டிற்கான ஒரு பிரதான உதாரணமாகும். இவ்வுதவியானது நாட்டின் பாற்பண்ணைக் கைத்தொழில் உற்பத்தியை கணிசமாக மேம்படுத்துவது மட்டுமின்றி முன்னரைவிட தற்போது அவ்வாறான மேம்பாடு மிகவும் முக்கியமானதாக காணப்படுகின்றது. அது இலங்கையின் பாற்பண்ணையாளர்கள் தமக்குள் போட்டியிட்டுக்கொள்ளவும், வளர்ச்சியடையவும், செழித்தோங்கவும் அவசியமான வளங்களை அவர்களுக்கு வழங்குகிறது என்று சுட்டிக்காட்டினார்.

# சாஹிரா தேசிய பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

(எம்.எஸ். அமீர் ஹுசைன்)

மாவனல்லை சாஹிரா தேசிய பாடசாலையின் நூற்றாண்டு விழா கொண்டாட்ட நிகழ்வை முன்னிட்டு வறிய மாணவர்களுக்காக பாடசாலை கற்றல் உபகரணங்களை பகிர்ந்தளிக்கும் நிகழ்வு அண்மையில் சாஹிரா தேசிய கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் ஏ.எம். நௌசாத் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்விற்கு மாவனல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி பிரியங்கா பிரியதர்சினி உட்பட பல முக்கிய அதிதிகள் கலந்துகொண்டனர். பதுரியா தேசிய பாடசாலை, தெல்கஹகொட மு.ம.வி, தனாகம மு.ம.வி, நாங்கூறுகம முஸ்லிம் வித்தியாலயம் உட்பட இப்பகுதியில் உள்ள தமிழ் மற்றும் சிங்கள மொழிமூல 12 பாடசாலைகளுக்கு இவ்வாறு அப்பியாசப் புத்தகங்கள் உட்பட கற்றல் உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.



இந்நிகழ்வில் சாஹிரா கல்லூரியின் பழைய மாணவர்கள், மஸ்ஜித் நிர்வாகிகள் மற்றும் கல்லூரிகளின் அதிபர்கள் உட்பட பலர் சமுகமளித்திருந்தனர். சுாஹிரா தேசிய பாடசாலையின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் 2020ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாயினும் கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக முழுமையாக நடைபெறாத நிலையில் தற்போது அதன் நிகழ்வுகள் கட்டம் கட்டமாக இடம்பெறுவதாக கல்லூரி அதிபர் நௌசாத் தெரிவித்தார்.

# பீபா உலகக் கிண்ணத்துக்குள் தடம் பதித்த அவுஸ்திரேலியா




கட்டாரில் நடைபெறவுள்ள 2022 பீபா உலகக்கிண்ண உதைபந்து தொடருக்கு அவுஸ்திரேலிய அணி தொடர்ச்சியாக 5ஆவது முறையாக தகுதிபெற்றுள்ளது. கட்டார் தலைநகர் டோஹாவின் அல்-ரையான் மைதானத்தில் நடைபெற்ற தகுதிச்சுற்றுப் போட்டியில் பீபா தரவரிசையில் 42ஆம் இடத்திலுள்ள அவுஸ்திரேலிய அணி, 22ஆம் இடத்திலுள்ள பெரு அணியை பெனால்டி ஷூட் அவுட் முறையில் 5-4 எனத் தோற்கடித்து இவ்வாறு பீபா உலகக்கிண்ணத் தொடருக்கு தகுதிபெற்றது.

இந்தாண்டு நடைபெறவுள்ள பீபா உதைபந்து தொடர் நவம்பர் 21 முதல் டிசம்பர் 18 வரை நடைபெறுகிறது. லீக் சுற்றில் 12 நாட்களுக்குத் தினமும் நான்கு ஆட்டங்கள் நடைபெறுகின்றன. டோஹாவைச் சுற்றியுள்ள 8 மைதானங்கள் இப்போட்டிக்காக பயன்படுத்தப்படுகின்றன. 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை உலகக்கிண்ணப் போட்டிகள் பீபா சர்வதேச உதைபந்து கூட்டமைப்பால் நடத்தப்படுகின்றன.

21ஆவது உலகக்கிண்ணத் தொடர் கடந்த 2018ஆம் ஆண்டு ரஷ்யாவில் முதல்முறையாக நடைபெற்றது. தரவரிசையில் 7ஆவது இடத்தில் இருந்த பிரான்ஸ் அணி குரோஷியாவை 4-2 என்ற கோல் கணக்கில் உலகக்கிண்ணத்தை வென்றது. இந்தாண்டின் பின்னர் 2026ஆம் ஆண்டு உலகக்கிண்ண உதைபந்து தொடரை நடத்துவதற்கான வாய்ப்பை அமெரிக்கா, மெக்சிக்கோ, கனடா ஆகிய நாடுகள் பெற்றுள்ளன. இப்போட்டியில் 48 நாடுகள் பங்கேற்கின்றன.




# கோஹ்லிக்கு சீரோ; ஜோ ரூட்டுக்கு பத்து

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஜோ ரூட் கடந்த 17 மாதங்களில் 10 டெஸ்ட் சதங்களை பதிவு செய்துள்ளார். எனினும், இதே காலகட்டத்தில் ஸ்ரீவ் ஸ்மித் மற்றும் விராட் கோஹ்லி ஆகியோர் ஒரே ஒரு சதம் கூட பதிவு செய்யாமல் உள்ளனர். மாடர்ன் டே கிரிக்கெட்டின் எப்.ஏ.பி-4 வீரர்களாக இந்தியாவின் விராட் கோஹ்லி, அவுஸ்திரேலியாவின் ஸ்ரீவ் ஸ்மித், நியூசிலாந்தின் கேன் வில்லியம்சன் மற்றும் இங்கிலாந்தின் ஜோ ரூட் ஆகியோர் திகழ்கின்றனர்.

இதில் கடந்த 2021 ஜனவரி 13இற்குப் பிறகு ஜோ ரூட் நீங்கலாக மற்ற மூவரும் இதுவரையில் டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரு சதம் கூட பதிவு செய்யவில்லை. இந்த 17 மாதங்களில் 10 டெஸ்ட் சதங்களை பதிவு செய்துள்ளார் ரூட். 42 இன்னிங்ஸ் விளையாடி 2,355 ஓட்டங்கள் குவித்துள்ளார் அவர். இதே காலகட்டத்தில் இந்திய வீரர் விராட் கோஹ்லி 24 இன்னிங்ஸ் விளையாடி 725 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதில் 5 அரைச்சதம் அடங்கும்.

அதேபோல் டெஸ்ட் கிரிக்கெட்டில் விராட் கோஹ்லி மற்றும் ஸ்மித் பதிவு செய்துள்ள 27 சதங்கள் என்ற கணக்கையும் ரூட் சமன் செய்துள்ளார். நியூசிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சதம் விளாசியதன் மூலம் ரூட் டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது 27ஆவது சதத்தை பதிவு செய்தார். விராட் கோஹ்லி, கடந்த 2019 நவம்பரில் டெஸ்ட் கிரிக்கெட்டில் சதம் பதிவு செய்தார். அதன் பிறகு இதுவரையில் மூன்று பார்மெட் கிரிக்கெட்டிலும் கோஹ்லி சதம் பதிவு செய்யாமல் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com



# வோர்னுக்கு அர்ப்பணிக்கப்படும் இலங்கை – ஆஸி. முதல் டெஸ்ட்

சுற்றுலா அவுஸ்திரேலியா - இலங்கை அணிகளுக்கு இடையில் நடைபெறவுள்ள முதல் டெஸ்ட் போட்டியானது, அண்மையில் மறைந்த அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் ஷேர்ன் வோர்னுக்கு அர்ப்பணிக்கப்படும் முகமாக விளையாடப்படவுள்ளது. எதிர்வரும் 29ஆம் திகதிமுதல் ஜூலை 3ஆம் திகதிவரை காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் குறித்த டெஸ்ட் போட்டி நடைபெறவுள்ளது.

இந்நிலையில், குறித்த ஷேர்ன் வோர்னின் குடும்பத்தாரை இந்தப் போட்டியில் பங்கேற்பதற்கு இலங்கை கிரிக்கெட் சபை மற்றும் இலங்கை சுற்றுலாத்துறை அமைச்சு ஆகியவை இணைந்து அழைத்துள்ளன. அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியானது இலங்கை அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் ஷேர்ன் வோர்னை பெருமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக, இலங்கை – அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரானது ஏற்கனவே முரளி - வோர்ன் கிண்ணமாக விளையாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முதல் வீரராக வரலாற்று சாதனை படைத்த அண்டர்சன்




டெஸ்ட் கிரிக்கெட்டில் 650 விக்கெட்டுகள் என்ற மைல்கல்லை எட்டி இங்கிலாந்து அணியின் அனுபவ வேகப்பந்துவீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன் சாதனை படைத்துள்ளார்.

நேற்று நிறைவுக்கு வந்த நியூசிலாந்து அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் 2ஆவது இன்னிங்ஸில் நியூசிலாந்து அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் டாம் லேதமை ஜேம்ஸ் அண்டர்சன் வீழ்த்தினார். இது ஜேம்ஸ் ஆண்டர்சனின் 650ஆவது டெஸ்ட் விக்கெட். இதன்மூலம் 650 டெஸ்ட் விக்கெட்டுகளை எட்டிய முதல் வேகப்பந்துவீச்சாளர் என்ற வரலாற்றுச் சாதனையை படைத்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வேகப்பந்துவீச்சாளர் மற்றும் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய 3ஆவது பந்துவீச்சாளர் என்ற சாதனைக்கு சொந்தக்காரரான அண்டர்சன், இப்போது 650 விக்கெட் என்ற மைல்கல்லை எட்டியுள்ளார். டெஸ்ட் கிரிக்கெட்டில் 800 விக்கெட்டுகளுடன் முத்தையா முரளிதரன் முதலிடத்திலும், 708 விக்கெட்டுகளுடன் ஷேன் வோர்ன் இரண்டாமிடத்திலும் உள்ள நிலையில், 3ஆம் இடத்திலுள்ள அண்டர்சன் இன்னும் 59 விக்கெட் வீழ்த்தினால், ஷேன் வோர்னை பின்னுக்குத்தள்ளி 2ஆம் இடத்திற்கு முன்னேறி வரலாறு படைப்பார்.

# யாழ். மாவட்ட வீரர்களுக்கு முதல் முறையாக வெற்றி







(யாழ். நிருபர்)

இலங்கை டென்னிஸ் சம்மேளனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட எஸ்.டி.ஆர். கூல் டென்னிஸின் 10 வயதிற்குட்பட்ட தனிநபர்களுக்கான டென்னிஸ் போட்டிகளில் யாழ். மாவட்ட வீரர்கள் முதன்முறையாக தமது வெற்றிகளை பதிவுசெய்துள்ளனர்.

கடந்த வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் இலங்கை டென்னிஸ் சம்மேளனத்தில் இப்போட்டிகள் நடைபெற்றன. இதில் 8 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான ஒற்றையர் போட்டியில் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன் ஜெ. நர்ஸ்வின் காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

7 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான இரட்டையர் போட்டியில் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன் ரா. ஆரோன் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். மேலும் 7 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான ஒற்றையர் போட்டியில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவி வி. அஸ்விதா இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் ட்ரிங்கோ போய்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியன்

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலையில் 40 வயதிற்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் ட்ரிங்கோ போய்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

திருகோணமலையில் அண்மையில் நடத்தப்பட்ட 40 வயதிற்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் ட்ரிங்கோ போய்ஸ் விளையாட்டுக்கழகம் சம்பியனாகவும், ஜமாலியா விளையாட்டுக் கழகம் ரன்னஸ் ஆகவும் தெரிவு செய்யப்பட்டது.

சம்பியன் அணியாக தெரிவுசெய்யப்பட்ட ட்ரிங்கோ போய்ஸ் அணிக்கு சம்பியன் வெற்றிக்கிண்ணமும், ரூபா 50 ஆயிரம் பணப்பரிசும், ரன்னஸாக தெரிவுசெய்யப்பட்ட ஜமாலியா விளையாட்டுக் கழகத்திற்கு வெற்றிக் கிண்ணமும், ரூபா 25 ஆயிரம் பணப்பரிசும் வழங்கப்பட்டன.

குறித்த சுற்றுப்போட்டியில் சிறந்த வீரர், சிறந்த கோல் காப்பாளருக்கு தலா ரூபா 5 ஆயிரம் பணப்பரிசு வீதம் வழங்கப்பட்டது. இச்சுற்றுப்போட்டியை கனடாவிலிருந்து வந்திருந்த திருகோணமலையின் சிறந்த உதைபந்தாட்ட, கிரிக்கெட் வீரருமான டேமியன் மெத்தியூஸ், ராஜன் ஆகியோர் இணைந்து வெகுசிறப்பாக நடத்தினர்.

இச்சுற்றுப்போட்டியின் பிரதம விருந்தினராக திருகோணமலை உதைபந்தாட்ட சங்கத்தின் முன்னாள் தலைவர் ஜெயசங்கர் மற்றும் திருகோணமலை விபுலானந்தா கல்லூரியின் அதிபர் றெமன்சோதி ஜெறோம் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.








# இந்தியாவை பின்தள்ளிய பாகிஸ்தான்

ஐ சி.சி. ஒருநாள் அணிகளுக்கான தரவரிசையில் இந்தியாவைப் பின்னுக்குத் தள்ளி பாபர் அஸாம் தலைமையிலான பாகிஸ்தான் அணி நான்காமிடத்தைப் பிடித்துள்ளது.

பாகிஸ்தான் அணி, மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை சொந்த மண்ணில் 3-0 என வென்றது. இந்தத் தொடர் வெற்றியின் மூலம் 106 புள்ளிகளுடன் ஐ.சி.சி. ஒருநாள் அணிகளின் தரவரிசையில் இந்தியாவை விடவும் கூடுதலாக ஒரு புள்ளி பெற்று பாகிஸ்தான் அணி இவ்வாறு முன்னேறியுள்ளது.

ஐ.சி.சி. ஒருநாள் அணிகளின் தரவரிசையில் 125 புள்ளிகளுடன் நியூசிலாந்து முதலிடத்தைப் பிடித்துள்ளது. அடுத்ததாக இங்கிலாந்து, அவுஸ்திரேலியா அணிகள் உள்ளன. 4ஆம் இடத்தில் பாகிஸ்தானும், 5ஆம் இடத்தில் இந்தியாவும் உள்ளன. இலங்கை அணி 87 புள்ளிகளுடன் எட்டாவது இடத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை – ஆஸி. அணிகளுக்கிடையிலான ஒருநாள் தொடர் நேற்று ஆரம்பம்




சுற்றுலா அவுஸ்திரேலியா அணிக்கும், இலங்கை அணிக்கும் இடையிலான ஐந்து போட்டிகள்கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் நேற்று ஆரம்பமானது.

கண்டி, பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் பகலிரவு போட்டியாக நடைபெற்ற முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இலங்கை இளையோர் அணியின் தலைவர் துனித் வெல்லாலகே நேற்றைய போட்டியில் இலங்கை அணியில் அறிமுகம் பெற்றுக்கொண்டார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு சிறப்பான ஆரம்பம் கிடைத்தது. தனுஷ்க குணதிலக்க மற்றும் பெத்தும் நிஸங்க ஜோடி சதம் கடக்க இருவரும் அரைச்சதத்தை பூர்த்திசெய்தனர். குணதிலக்க 55 ஓட்டங்களுடன் ரன் அவுட் முறையில் ஆட்டமிழக்க, நிஸங்க 56 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்துவந்த தனஞ்சய டி சில்வா வெறும் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். எனினும், குசல் மெண்டிஸ் சரித் அசலங்க ஜோடி இலங்கை அணியை சரிவிலிருந்து மீட்டது.

அசலங்க 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இறுதிவரை போராடிய மெண்டிஸ் ஆட்டமிழக்காமல் 86 ஓட்டங்களை பெற, அதிரடியை வெளிப்படுத்திய ஹசரங்க 19 பந்துகளில் 37 ஓட்டங்களை குவித்தார். இறுதியில் 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 300 ஓட்டங்களை குவித்தது இலங்கை அணி.

Sri Lanka Cricket
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7